# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2015

# மதிப்பீட்டு அறிக்கை

# 22 - தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆய்வு அபிவிருத்திக் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2015
# மதிப்பீட்டு அறிக்கை

# 22 - தமிழ்மொழியும் இலக்கியமும்

**ஆய்வு அபிவிருத்திக் கிளை**
**தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

**முழுப்பதிப்புரிமையுடையது.**

**தமிழ்மொழியும் இலக்கியமும்**

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2015

**நிதி அனுசரணை**

எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு
பாடசாலைக் கல்விமுறைமையை மாற்றியமைக்கும் செயற்றிட்டம்
(TSEP - WB)

# அறிமுகம்

இலங்கையின் பொதுப் பரீட்சைகளில் க.பொ.த (சா.தர)ப் பரீட்சைக்கே அதிகளவான பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். தேசிய மட்டத்தில் நடாத்தப்படும் இப்பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் வழங்கப்படும் சான்றிதழானது உயர்கல்விக்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்கு மட்டுமன்றி நடுத்தரமட்ட வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்கும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியான பல்கலைக்கழகங்களில் சில பாட நெறிகளுக்கான அடிப்படைத் தகைமைக்கான அளவுகோலாகவும் கொள்ளப்படுகின்றது. இப்பரீட்சையின் நம்பகம், தகுதி, உயர் பண்புத்தரம் ஆகியனவே இதற்குக் காரணமாக அமைகின்றன.

இப்பரீட்சையில் உயர் அடைவைப் பெறுவதற்கு மாணவரும் அவர்களது அடைவை உறுதிப்படுத்துவதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் அயராது உழைக்கின்றனர். இவர்களது எதிர்பார்ப்புக்களை அடைவதற்கு உதவும் முகமாகவே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இம் மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்துள்ளது. இம் மதிப்பீட்டு அறிக்கையில் அடங்கியுள்ள தகவல்கள் பரீட்சார்த்திகள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடத்துக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்விசார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடுவோர் ஆகியோருக்குப் பயனுடையனவாக அமையும். எனவே, இந்த அறிக்கையை அனேகமானோரின் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் நூலகத்தில் பேணுவது சிறந்ததாகும்.

இம் மதிப்பீட்டு அறிக்கை மூன்று பகுதிகளைக் கொண்டதாகும். பாடக்குறிக்கோள்கள், பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள், பாட வினாப்பத்திரத்தின் அடிப்படையில் பரீட்சார்த்திகளின் அடைவு என்பன ஒவ்வொரு வினாவுக்கும் தனித்தனியே பகுதி 1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் பயன்படுத்தப்பட்டுவரும் மரபுரீதியான சோதனைக் கோட்பாடு (Classical testing theory) மற்றும் உருப்படித் துலங்கல் கோட்பாடு (Item response theory) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இப் பகுப்பாய்வு அறிக்கையில் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் உச்ச நம்பகத்தன்மை, தகுதி ஆகியவற்றைக் கொண்டதாகும்.

தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தின் I,II, III ஆகிய வினாப்பத்திரங்களில் எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் பின்னூட்டலுக்கான ஆலோசனைகள் ஆகியன இந்த அறிக்கையின் பகுதி II இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வினாப்பத்திரத்தின் ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள், கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள் ஆகியன இந்த அறிக்கையின் பகுதி III இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. பல்வேறு தேர்ச்சிகள் அத்தேர்ச்சி மட்டங்களை அண்மிக்கத்தக்க வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும் விதம் என்பன பற்றிய வழிகாட்டல் இதன்மூலம் கிடைக்கப்பெறுமென நினைக்கின்றேன்.

இவ் அறிக்கையின் பண்புத்தரத்தை மேம்படுத்துவதற்கான உங்களது ஆலோசனைகள், கருத்துக்களை வரவேற்கின்றேன். இந்த அறிக்கையைத் தயாரிக்க அர்ப்பணிப்புடன் பணியாற்றிய கட்டுப்பாட்டுப் பரீட்சகர்களுக்கும் வளவாளர்களாகப் பங்கேற்றவர்களுக்கும் தகவல்களை வழங்கிய பிரதம/ மேலதிக பிரதம/ உதவிப் பரீட்சகர்களுக்கும் எமது திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பணிக்குழுவினர் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டபிள்யு. எம். என். ஜே. புஷ்பகுமார**
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2016 நவம்பர் 30
ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | - | டபிள்யு. எம். என். ஜே. புஷ்பகுமார<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | - | கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| இணைப்பும் தொகுப்பும் | - | எம். ஜீவராணிபுனிதா<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| மொழிப்பதிப்பு | - | துரைசாமி இராஜேந்திரம்<br>ஓய்வுபெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர்<br>திறந்த பல்கலைக்கழகம் |
| | - | சோதிநாயகி பாலசுந்தரம்<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் (ஓய்வு நிலை)<br>இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் |
| ஆக்கக் குழு | - | க. மனோரஞ்சன்<br>ஆசிரியர்<br>மு/வித்தியானந்தா கல்லூரி, முள்ளியவளை |
| | | சு. சுதர்ஷன்<br>ஆசிரியர்<br>யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்<br>கைதடி |
| | - | சி. இளந்திரையன்<br>ஆசிரியர்<br>கிளி/ பூநகரி மத்திய கல்லூரி,<br>பூநகரி |
| கணினிப் பக்க வடிவமைப்பு | - | எஸ். றஹீனா ஹாஷிம்<br>கணினி தரவுப் பதிவாளர் |

# உள்ளடக்கம்


பகுதி I **பக்க எண்**

**1 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்**

**1.1 பாடக் குறிக்கோள்கள்** 1

**1.2 பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்**

1.2.1 பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2

1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 2

1.2.3 மாவட்டங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 3

1.2.4 கல்வி வலயங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 4

1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம் 7

**1.3. பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு**

1.3.1 வினாப்பத்திரம் I இல் பெறப்பட்டுள்ள அடைவு 8

1.3.2 வினாப்பத்திரம் II வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 9

1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 9

1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு 10

1.3.5 வினாப்பத்திரம் III இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 11

1.3.6 வினாப்பத்திரம் III இல் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 11

1.3.7 வினாப்பத்திரம் III இல் பெறப்பட்ட அடைவு 12

பகுதி II

**2 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

**2.1 வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு 13

2.1.2 வினாப்பத்திரம் I 14

2.1.3. வினாப்பத்திரம் I - புள்ளி வழங்கும் திட்டம் 18

2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் 19

2.1.5 வினாப்பத்திரம் I இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்துள்ள விதம் (சதவீதத்தில்) 23

**2.2 வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு 24

2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும் 25

**2.3 வினாப்பத்திரம் III உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.3.1 வினாப்பத்திரம் III - கட்டமைப்பு 41

2.3.2 வினாப்பத்திரம் III - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளிவழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும் 42

2.3.3 வினாப்பத்திரம் III இற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளின் தொகுப்பும் பொதுவான ஆலோசனைகளும் 62

பகுதி III

**3.0 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

**3.1 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள்** 63

**3.2 கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும்** 65

# பகுதி I

## 1 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

- தமிழ்மொழியைத் தொடர்பாடற் கருவியாக காலத்திற்குப் பொருத்தமான முறையில் வினைத்திறனுடன் கையாளுதல்.
- இலக்கியங்களினூடாக சமூக, கலாசார விழுமியங்களை அறிந்து அவற்றைப் பேணும் மனப்பாங்கை வெளிப்படுத்தல்.
- கலைகள், அறிவியல், தொழினுட்பத்துறைகள் என்பவற்றின் வளர்ச்சிக்கேற்ப மொழியைச் செம்மையாகப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுதல்.
- மொழியூடாக மாணவர் தம் ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல்.
- தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க மொழியைச் சாதனமாகக் கொள்ளல்.

## 1.2. பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரங்கள்

### 1.2.1 பாடத்திற்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| மொழி | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| தமிழ் | **68842** | **19915** | **88757** |
| **மொத்தம்** | **68842** | **19915** | **88757** |

**அட்டவணை 1**

### 1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்தி | | தனிப்பட்ட பரீட்சார்த்தி | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 5594 | 8.13 | 108 | 0.54 | 5702 | 6.42 |
| B | 11019 | 16.01 | 773 | 3.88 | 11792 | 13.29 |
| C | 19044 | 27.66 | 3738 | 18.77 | 22782 | 25.67 |
| S | 20106 | 29.21 | 7762 | 38.98 | 27868 | 31.4 |
| W | 13079 | 19.00 | 7534 | 37.83 | 20613 | 23.22 |
| **மொத்தம்** | **68842** | **100** | **19915** | **100** | **88757** | **100** |

**அட்டவணை 2**

### 1.2.3 மாவட்டங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் :

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 3153 | 411 | 13.04 | 647 | 20.52 | 778 | 24.67 | 770 | 24.42 | 2606 | 82.65 | 547 | 17.35 |
| 2. கம்பஹா | 1186 | 82 | 6.91 | 208 | 17.54 | 363 | 30.61 | 307 | 25.89 | 960 | 80.94 | 226 | 19.06 |
| 3. களுத்துறை | 1593 | 153 | 9.60 | 263 | 16.51 | 415 | 26.05 | 399 | 25.05 | 1230 | 77.21 | 363 | 22.79 |
| 4. கண்டி | 4447 | 242 | 5.44 | 685 | 15.40 | 1222 | 27.48 | 1269 | 28.54 | 3418 | 76.86 | 1029 | 23.14 |
| 5. மாத்தளை | 1268 | 96 | 7.57 | 172 | 13.56 | 327 | 25.79 | 360 | 28.39 | 955 | 75.32 | 313 | 24.68 |
| 6. நுவரெலியா | 5124 | 387 | 7.55 | 906 | 17.68 | 1627 | 31.75 | 1524 | 29.74 | 4444 | 86.73 | 680 | 13.27 |
| 7. காலி | 276 | 16 | 5.80 | 42 | 15.22 | 73 | 26.45 | 68 | 24.64 | 199 | 72.10 | 77 | 27.90 |
| 8. மாத்தறை | 416 | 13 | 3.13 | 64 | 15.38 | 113 | 27.16 | 114 | 27.40 | 304 | 73.08 | 112 | 26.92 |
| 9. அம்பாந்தோட்டை | 161 | 8 | 4.97 | 11 | 6.83 | 47 | 29.19 | 46 | 28.57 | 112 | 69.57 | 49 | 30.43 |
| 10. யாழ்ப்பாணம் | 9776 | 1143 | 11.69 | 1884 | 19.27 | 2679 | 27.40 | 2384 | 24.39 | 8090 | 82.75 | 1686 | 17.25 |
| 11. கிளிநொச்சி | 2178 | 112 | 5.14 | 284 | 13.04 | 557 | 25.57 | 604 | 27.73 | 1557 | 71.49 | 621 | 28.51 |
| 12. மன்னார் | 1639 | 144 | 8.79 | 301 | 18.36 | 547 | 33.37 | 480 | 29.29 | 1472 | 89.81 | 167 | 10.19 |
| 13. வவுனியா | 2308 | 231 | 10.01 | 414 | 17.94 | 681 | 29.51 | 645 | 27.95 | 1971 | 85.40 | 337 | 14.60 |
| 14. முல்லைத்தீவு | 1620 | 117 | 7.22 | 285 | 17.59 | 430 | 26.54 | 488 | 30.12 | 1320 | 81.48 | 300 | 18.52 |
| 15. மட்டக்களப்பு | 7173 | 753 | 10.50 | 1261 | 17.58 | 1904 | 26.54 | 1976 | 27.55 | 5894 | 82.17 | 1279 | 17.83 |
| 16. அம்பாறை | 5316 | 615 | 11.57 | 1045 | 19.66 | 1527 | 28.72 | 1396 | 26.26 | 4583 | 86.21 | 733 | 13.79 |
| 17. திருகோணமலை | 4306 | 225 | 5.23 | 578 | 13.42 | 1058 | 24.57 | 1352 | 31.40 | 3213 | 74.62 | 1093 | 25.38 |
| 18. குருநாகல் | 1879 | 172 | 9.15 | 343 | 18.25 | 513 | 27.30 | 449 | 23.90 | 1477 | 78.61 | 402 | 21.39 |
| 19. புத்தளம் | 2301 | 206 | 8.95 | 372 | 16.17 | 596 | 25.90 | 638 | 27.73 | 1812 | 78.75 | 489 | 21.25 |
| 20. அனுராதபுரம் | 988 | 46 | 4.66 | 145 | 14.68 | 290 | 29.35 | 274 | 27.73 | 755 | 76.42 | 233 | 23.58 |
| 21. பொலன்னறுவை | 439 | 41 | 9.34 | 69 | 15.72 | 122 | 27.79 | 131 | 29.84 | 363 | 82.69 | 76 | 17.31 |
| 22. பதுளை | 2595 | 123 | 4.74 | 334 | 12.87 | 785 | 30.25 | 811 | 31.25 | 2053 | 79.11 | 542 | 20.89 |
| 23. மொனராகலை | 207 | 1 | 0.48 | 12 | 5.80 | 54 | 26.09 | 60 | 28.99 | 127 | 61.35 | 80 | 38.65 |
| 24. இரத்தினபுரி | 1170 | 66 | 5.64 | 150 | 12.82 | 342 | 29.23 | 386 | 32.99 | 944 | 80.68 | 226 | 19.32 |
| 25. கேகாலை | 1582 | 160 | 10.11 | 286 | 18.08 | 423 | 26.74 | 408 | 25.79 | 1277 | 80.72 | 305 | 19.28 |
| **மொத்தம்** | **63101** | **5563** | **8.82** | **10761** | **17.05** | **17473** | **27.69** | **17339** | **27.48** | **51136** | **81.04** | **11965** | **18.96** |

**அட்டவணை 3**

## 1.2.4 கல்வி வலயங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் :

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 2841 | 385 | 13.55 | 608 | 21.4 | 705 | 24.82 | 669 | 23.55 | 2367 | 83.32 | 474 | 16.68 |
| 2. ஹோமாகம | 135 | 4 | 2.96 | 12 | 8.89 | 31 | 22.96 | 56 | 41.48 | 103 | 76.3 | 32 | 23.7 |
| 3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர | 32 | 2 | 6.25 | 4 | 12.5 | 4 | 12.5 | 8 | 25 | 18 | 56.25 | 14 | 43.75 |
| 4. பிலியந்தல | 145 | 20 | 13.79 | 23 | 15.86 | 38 | 26.21 | 37 | 25.52 | 118 | 81.38 | 27 | 18.62 |
| 5. கம்பஹா | 292 | 27 | 9.25 | 38 | 13.01 | 76 | 26.03 | 74 | 25.34 | 215 | 73.63 | 77 | 26.37 |
| 6 மினுவாங்கொட | 278 | 17 | 6.12 | 69 | 24.82 | 98 | 35.25 | 51 | 18.35 | 235 | 84.53 | 43 | 15.47 |
| 7. நீர்கொழும்பு | 296 | 16 | 5.41 | 35 | 11.82 | 90 | 30.41 | 93 | 31.42 | 234 | 79.05 | 62 | 20.95 |
| 8. களனி | 320 | 23 | 7.19 | 65 | 20.31 | 100 | 31.25 | 88 | 27.5 | 276 | 86.25 | 44 | 13.75 |
| 9. களுத்துறை | 1140 | 125 | 10.96 | 188 | 16.49 | 289 | 25.35 | 280 | 24.56 | 882 | 77.37 | 258 | 22.63 |
| 10. மத்துகம | 174 | 10 | 5.75 | 33 | 18.97 | 46 | 26.44 | 45 | 25.86 | 134 | 77.01 | 40 | 22.99 |
| 11. ஹொரணை | 279 | 18 | 6.45 | 42 | 15.05 | 80 | 28.67 | 74 | 26.52 | 214 | 76.7 | 65 | 23.3 |
| 12. கண்டி | 928 | 87 | 9.38 | 175 | 18.86 | 275 | 29.63 | 261 | 28.13 | 798 | 85.99 | 130 | 14.01 |
| 13. தெனுவர | 575 | 46 | 8 | 94 | 16.35 | 147 | 25.57 | 138 | 24 | 425 | 73.91 | 150 | 26.09 |
| 14. கம்பளை | 1125 | 46 | 4.09 | 148 | 13.16 | 318 | 28.27 | 341 | 30.31 | 853 | 75.82 | 272 | 24.18 |
| 15. தெல்தெனியா | 168 | 4 | 2.38 | 22 | 13.1 | 48 | 28.57 | 67 | 39.88 | 141 | 83.93 | 27 | 16.07 |
| 16. வத்தேகம | 776 | 22 | 2.84 | 99 | 12.76 | 231 | 29.77 | 232 | 29.9 | 584 | 75.26 | 192 | 24.74 |
| 17. கட்டுகஸ்தொட்ட | 875 | 37 | 4.23 | 147 | 16.8 | 203 | 23.2 | 231 | 26.4 | 618 | 70.63 | 257 | 29.37 |
| 18. மாத்தளை | 1060 | 82 | 7.74 | 144 | 13.58 | 268 | 25.28 | 301 | 28.4 | 795 | 75 | 265 | 25 |
| 19. கலேவெல | 177 | 15 | 8.47 | 27 | 15.25 | 50 | 28.25 | 42 | 23.73 | 134 | 75.71 | 43 | 24.29 |
| 20. நாஉல | 31 | 0 | 0 | 0 | 0 | 9 | 29.03 | 17 | 54.84 | 26 | 83.87 | 5 | 16.13 |
| 21. வில்கமுவ | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 22. நுவரெலியா | 2025 | 140 | 6.91 | 350 | 17.28 | 712 | 35.16 | 602 | 29.73 | 1804 | 89.09 | 221 | 10.91 |
| 23. கொத்மலை | 563 | 27 | 4.8 | 66 | 11.72 | 143 | 25.4 | 188 | 33.39 | 424 | 75.31 | 139 | 24.69 |
| 24. ஹட்டன் | 1994 | 202 | 10.13 | 407 | 20.41 | 603 | 30.24 | 534 | 26.78 | 1746 | 87.56 | 248 | 12.44 |
| 25. வலப்பனை | 423 | 15 | 3.55 | 76 | 17.97 | 149 | 35.22 | 137 | 32.39 | 377 | 89.13 | 46 | 10.87 |
| 26. ஹங்குரன்கெத்த | 119 | 3 | 2.52 | 7 | 5.88 | 20 | 16.81 | 63 | 52.94 | 93 | 78.15 | 26 | 21.85 |
| 27. காலி | 204 | 14 | 6.86 | 31 | 15.2 | 53 | 25.98 | 48 | 23.53 | 146 | 71.57 | 58 | 28.43 |
| 28. எல்பிட்டிய | 43 | 1 | 2.33 | 8 | 18.6 | 8 | 18.6 | 12 | 27.91 | 29 | 67.44 | 14 | 32.56 |
| 29. அம்பலாங்கொடை | 11 | 0 | 0 | 2 | 18.18 | 4 | 36.36 | 3 | 27.27 | 9 | 81.82 | 2 | 18.18 |
| 30. உடுகம | 18 | 1 | 5.56 | 1 | 5.56 | 8 | 44.44 | 5 | 27.78 | 15 | 83.33 | 3 | 16.67 |
| 31. மாத்தறை | 179 | 7 | 3.91 | 33 | 18.44 | 49 | 27.37 | 48 | 26.82 | 137 | 76.54 | 42 | 23.46 |
| 32. அக்குரஸ்ஸ | 119 | 4 | 3.36 | 16 | 13.45 | 29 | 24.37 | 28 | 23.53 | 77 | 64.71 | 42 | 35.29 |
| 33. முலடியன-ஹக்மன | 17 | 0 | 0 | 3 | 17.65 | 10 | 58.82 | 2 | 11.76 | 15 | 88.24 | 2 | 11.76 |
| 34. மொறவக்க | 101 | 2 | 1.98 | 12 | 11.88 | 25 | 24.75 | 36 | 35.64 | 75 | 74.26 | 26 | 25.74 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 32. தங்காலை | 13 | 0 | 0 | 0 | 0 | 3 | 23.08 | 5 | 38.46 | 8 | 61.54 | 5 | 38.46 |
| 36. அம்பாந்தோட்டை | 131 | 7 | 5.34 | 8 | 6.11 | 36 | 27.48 | 38 | 29.01 | 89 | 67.94 | 42 | 32.06 |
| 37. வலஸ்முல்லை | 17 | 1 | 5.88 | 3 | 17.65 | 8 | 47.06 | 3 | 17.65 | 15 | 88.24 | 2 | 11.76 |
| 38. யாழ்ப்பாணம் | 3518 | 444 | 12.62 | 813 | 23.11 | 1022 | 29.05 | 792 | 22.51 | 3071 | 87.29 | 447 | 12.71 |
| 39. தீவகம் | 712 | 40 | 5.62 | 110 | 15.45 | 172 | 24.16 | 201 | 28.23 | 523 | 73.46 | 189 | 26.54 |
| 40. தென்மராட்சி | 1004 | 75 | 7.47 | 164 | 16.33 | 273 | 27.19 | 267 | 26.59 | 779 | 77.59 | 225 | 22.41 |
| 41. வலிகாமம் | 2906 | 260 | 8.95 | 498 | 17.14 | 831 | 28.6 | 805 | 27.7 | 2394 | 82.38 | 512 | 17.62 |
| 42. வடமராட்சி | 1636 | 324 | 19.8 | 300 | 18.34 | 380 | 23.23 | 319 | 19.5 | 1323 | 80.87 | 313 | 19.13 |
| 43. கிளிநொச்சி | 2178 | 112 | 5.14 | 284 | 13.04 | 557 | 25.57 | 604 | 27.73 | 1557 | 71.49 | 621 | 28.51 |
| 44. மன்னார் | 1323 | 120 | 9.07 | 255 | 19.27 | 427 | 32.28 | 395 | 29.86 | 1197 | 90.48 | 126 | 9.52 |
| 45. மடு | 312 | 24 | 7.69 | 48 | 15.38 | 121 | 38.78 | 80 | 25.64 | 273 | 87.5 | 39 | 12.5 |
| 46. வவுனியா - தெற்கு | 1836 | 189 | 10.29 | 341 | 18.57 | 555 | 30.23 | 496 | 27.02 | 1581 | 86.11 | 255 | 13.89 |
| 47. வவுனியா - வடக்கு | 485 | 42 | 8.66 | 74 | 15.26 | 129 | 26.6 | 155 | 31.96 | 400 | 82.47 | 85 | 17.53 |
| 48. முல்லைத்தீவு | 1124 | 104 | 9.25 | 227 | 20.2 | 290 | 25.8 | 316 | 28.11 | 937 | 83.36 | 187 | 16.64 |
| 49. துணுக்காய் | 496 | 13 | 2.62 | 58 | 11.69 | 140 | 28.23 | 172 | 34.68 | 383 | 77.22 | 113 | 22.78 |
| 50. மட்டக்களப்பு | 2153 | 322 | 14.96 | 431 | 20.02 | 557 | 25.87 | 497 | 23.08 | 1807 | 83.93 | 346 | 16.07 |
| 51. கல்குடா | 1071 | 54 | 5.04 | 153 | 14.29 | 343 | 32.03 | 345 | 32.21 | 895 | 83.57 | 176 | 16.43 |
| 52. பட்டிருப்பு | 1356 | 106 | 7.82 | 236 | 17.4 | 348 | 25.66 | 360 | 26.55 | 1050 | 77.43 | 306 | 22.57 |
| 53. மட்டக்களப்பு -மத்தி | 1650 | 235 | 14.24 | 344 | 20.85 | 450 | 27.27 | 427 | 25.88 | 1456 | 88.24 | 194 | 11.76 |
| 54. மட்டக்களப்பு -மேற்கு | 943 | 36 | 3.82 | 97 | 10.29 | 206 | 21.85 | 347 | 36.8 | 686 | 72.75 | 257 | 27.25 |
| 55. அம்பாறை | 10 | 0 | 0 | 2 | 20 | 4 | 40 | 4 | 40 | 10 | 100.00 | 0 | 0 |
| 56. கல்முனை | 2148 | 343 | 15.97 | 432 | 20.11 | 598 | 27.84 | 528 | 24.58 | 1901 | 88.5 | 247 | 11.5 |
| 57. சம்மாந்துறை | 1267 | 66 | 5.21 | 190 | 15 | 352 | 27.78 | 355 | 28.02 | 963 | 76.01 | 304 | 23.99 |
| 58. மஹாஓய | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 59. தெஹியத்தகண்டிய | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 60. அக்கரைப்பற்று | 1064 | 125 | 11.75 | 262 | 24.62 | 330 | 31.02 | 293 | 27.54 | 1010 | 94.92 | 54 | 5.08 |
| 61. திருக்கோவில் | 827 | 83 | 10.04 | 158 | 19.11 | 242 | 29.26 | 216 | 26.12 | 699 | 84.52 | 128 | 15.48 |
| 62. திருகோணமலை | 1419 | 92 | 6.48 | 248 | 17.48 | 388 | 27.34 | 398 | 28.05 | 1126 | 79.35 | 293 | 20.65 |
| 63. மூதூர் | 1207 | 62 | 5.14 | 143 | 11.85 | 290 | 24.03 | 388 | 32.15 | 883 | 73.16 | 324 | 26.84 |
| 64. கந்தளாய் | 150 | 6 | 4 | 27 | 18 | 42 | 28 | 39 | 26 | 114 | 76 | 36 | 24 |
| 65. கிண்ணியா | 1299 | 58 | 4.46 | 133 | 10.24 | 305 | 23.48 | 455 | 35.03 | 951 | 73.21 | 348 | 26.79 |
| 66. திருகோணமலை வடக்கு | 231 | 7 | 3.03 | 27 | 11.69 | 33 | 14.29 | 72 | 31.17 | 139 | 60.17 | 92 | 39.83 |
| 67. குருநாகல் | 418 | 42 | 10.05 | 69 | 16.51 | 94 | 22.49 | 95 | 22.73 | 300 | 71.77 | 118 | 28.23 |
| 68. குளியாப்பிட்டிய | 272 | 26 | 9.56 | 58 | 21.32 | 62 | 22.79 | 69 | 25.37 | 215 | 79.04 | 57 | 20.96 |
| 69 நிக்கவெரட்டிய | 167 | 12 | 7.19 | 33 | 19.76 | 60 | 35.93 | 43 | 25.75 | 148 | 88.62 | 19 | 11.38 |
| 70. மாகோ | 161 | 11 | 6.83 | 28 | 17.39 | 41 | 25.47 | 32 | 19.88 | 112 | 69.57 | 49 | 30.43 |
| 71. கிரியுள்ள | 592 | 47 | 7.94 | 116 | 19.59 | 195 | 32.94 | 134 | 22.64 | 492 | 83.11 | 100 | 16.89 |
| 72. இப்பாகமுவ | 269 | 35 | 13.01 | 39 | 14.5 | 60 | 22.3 | 76 | 28.25 | 210 | 78.07 | 59 | 21.93 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 73. புத்தளம் | 2018 | 176 | 8.72 | 320 | 15.86 | 524 | 25.97 | 564 | 27.95 | 1584 | 78.49 | 434 | 21.51 |
| 74 சிலாபம் | 274 | 30 | 10.95 | 49 | 17.88 | 68 | 24.82 | 73 | 26.64 | 220 | 80.29 | 54 | 19.71 |
| 75. அனுராதபுரம் | 314 | 18 | 5.73 | 55 | 17.52 | 96 | 30.57 | 70 | 22.29 | 239 | 76.11 | 75 | 23.89 |
| 76. தபுத்தேகம் | 36 | 3 | 8.33 | 3 | 8.33 | 10 | 27.78 | 5 | 13.89 | 21 | 58.33 | 15 | 41.67 |
| 77. கெக்கிராவை | 375 | 12 | 3.2 | 34 | 9.07 | 103 | 27.47 | 124 | 33.07 | 273 | 72.8 | 102 | 27.2 |
| 78. கலென்பிந்துனுவெவ | 136 | 6 | 4.41 | 26 | 19.12 | 32 | 23.53 | 42 | 30.88 | 106 | 77.94 | 30 | 22.06 |
| 79. கெப்பித்திகொல்லேவ | 127 | 7 | 5.51 | 27 | 21.26 | 49 | 38.58 | 33 | 25.98 | 116 | 91.34 | 11 | 8.66 |
| 80. பொலன்னறுவ | 332 | 39 | 11.75 | 63 | 18.98 | 92 | 27.71 | 90 | 27.11 | 284 | 85.54 | 48 | 14.46 |
| 81. ஹிங்குரக் கொடை | 7 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 | 28.57 | 2 | 28.57 | 5 | 71.43 |
| 82. திம்புலாகல | 100 | 2 | 2 | 6 | 6 | 30 | 30 | 39 | 39 | 77 | 77 | 23 | 23 |
| 83. பதுளை | 691 | 54 | 7.81 | 104 | 15.05 | 234 | 33.86 | 211 | 30.54 | 603 | 87.26 | 88 | 12.74 |
| 84. பண்டாரவளை | 884 | 37 | 4.19 | 111 | 12.56 | 240 | 27.15 | 279 | 31.56 | 667 | 75.45 | 217 | 24.55 |
| 85. மஹியங்கனை | 11 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 11 | 100 |
| 86. வெலிமடை | 447 | 23 | 5.15 | 52 | 11.63 | 149 | 33.33 | 140 | 31.32 | 364 | 81.43 | 83 | 18.57 |
| 87. பசறை | 486 | 9 | 1.85 | 66 | 13.58 | 138 | 28.4 | 157 | 32.3 | 370 | 76.13 | 116 | 23.87 |
| 88. வியலுவ | 76 | 0 | 0 | 1 | 1.32 | 24 | 31.58 | 24 | 31.58 | 49 | 64.47 | 27 | 35.53 |
| 89. மொனராகலை | 122 | 0 | 0 | 4 | 3.28 | 25 | 20.49 | 35 | 28.69 | 64 | 52.46 | 58 | 47.54 |
| 90. வெல்லவாய | 8 | 0 | 0 | 0 | 0 | 3 | 37.5 | 1 | 12.5 | 4 | 50 | 4 | 50 |
| 91. பிபிலை | 77 | 1 | 1.3 | 8 | 10.39 | 26 | 33.77 | 24 | 31.17 | 59 | 76.62 | 18 | 23.38 |
| 92. இரத்தினபுரி | 464 | 18 | 3.88 | 58 | 12.5 | 147 | 31.68 | 158 | 34.05 | 381 | 82.11 | 83 | 17.89 |
| 93. பலாங்கொடை | 314 | 30 | 9.55 | 40 | 12.74 | 101 | 32.17 | 97 | 30.89 | 268 | 85.35 | 46 | 14.65 |
| 94. நிவித்திகல | 140 | 4 | 2.86 | 15 | 10.71 | 30 | 21.43 | 49 | 35 | 98 | 70 | 42 | 30 |
| 95. எம்பிலிபிடிய | 252 | 14 | 5.56 | 37 | 14.68 | 64 | 25.4 | 82 | 32.54 | 197 | 78.17 | 55 | 21.83 |
| 96. கேகாலை | 219 | 26 | 11.87 | 26 | 11.87 | 43 | 19.63 | 65 | 29.68 | 160 | 73.06 | 59 | 26.94 |
| 97. மாவனல்லை | 814 | 105 | 12.9 | 190 | 23.34 | 219 | 26.9 | 185 | 22.73 | 699 | 85.87 | 115 | 14.13 |
| 98. தெஹிஓவிட்ட | 549 | 29 | 5.28 | 70 | 12.75 | 161 | 29.33 | 158 | 28.78 | 418 | 76.14 | 131 | 23.86 |
| மொத்தம் | **63101** | **5563** | **8.82** | **10761** | **17.05** | **17473** | **27.69** | **17339** | **27.48** | **51136** | **81.04** | **11965** | **18.96** |

**அட்டவணை 4**

## 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 0 | 0.00 | 88757 | 100.00 |
| 81 - 90 | 202 | 0.23 | 88757 | 100.00 |
| 71 - 80 | 3257 | 3.67 | 88555 | 99.77 |
| 61 - 70 | 9808 | 11.05 | 85298 | 96.10 |
| 51 - 60 | 16015 | 18.04 | 75490 | 85.05 |
| 41 - 50 | 18221 | 20.53 | 59475 | 67.01 |
| 31 - 40 | 18400 | 20.73 | 41254 | 46.48 |
| 21 - 30 | 13493 | 15.20 | 22854 | 25.75 |
| 11 - 20 | 7431 | 8.37 | 9361 | 10.55 |
| 01 - 10 | 1927 | 2.17 | 1930 | 2.17 |
| 00 - 00 | 3 | 0.00 | 0.00 | 0.00 |


**அட்டவணை 5**

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெறும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.

உ-ம் : இப்பாடத்தில் 3257 மாணவர்கள் 71-80 இற்கும் இடைப்பட்ட வகுப்பாயிடையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இது 3.67% ஆகும். 20.73% த்தினர் அதாவது 18400 பேர் 31-40 இற்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

## 1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு


### 1.3.1 வினாத்தாள் I இல் பெறப்பட்டுள்ள அடைவு




**வரைபு 1** இது RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகிறது.

உதாரணம் - மேலே உள்ள வரைபின்படி 7ஆம் வினாவுக்குச் சரியான விடையளித்தோர் 10% ஆகும். 3 ஆம் வினாவுக்குச் சரியான விடையளித்தோர் 92% ஆகும். இதற்கேற்ப 7ஆம் வினா இலகுத்தன்மை குறைந்ததாகவும் (கடினமானதாகவும்) 3ஆம் வினா இலகுத்தன்மை கூடியதாகவும் கருதலாம்.

## 1.3.2 வினாப்பத்திரம் II வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்.





வரைபு 2 - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது)

(RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் - வினாப்பத்திரம் II இன் 1-5 வரையான வினாக்கள் கட்டாயம் தெரிவு செய்யப்பட வேண்டிய வினாக்களாகும். எனினும் முதலாம் வினாவை 99% ஆனோரும் ஏனைய வினாக்களை 98% ஆனோரும் தெரிவு செய்துள்ளனர்.

## 1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெற்றுள்ள விதம்





வரைபு 3 - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம்

1 ஆம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20 ஆகும். புள்ளிவீச்சு 00-25% இற்கிடையில் (0-5 புள்ளிகள்) 23% ஆனோரும் புள்ளிவீச்சு 26-50% இற்கிடையில் (6-10 புள்ளிகள்) 35% த்தினரும் புள்ளிவீச்சு 51-75% இற்கிடையில் (11-15 புள்ளிகள்) 35% ஆனோரும் புள்ளிவீச்சு 76-100% இற்கிடையில் (16-20 புள்ளிகள்) 8% த்தினரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

## 1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு





**வரைபு 4** (இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகின்றது.

உதாரணம் :- வினா 1 இல் உபபிரிவு (i), (iv) ஆகிய வினாக்களின் இலகுச்சுட்டி முறையே 64% ஆகவும் 63% ஆகவும் காணப்படுகின்றது. உபபிரிவு (ii) இன் 'அ' பிரிவு 14மூ ஆகவும் காணப்படுகின்றது. வினா 2 இல் உபபிரிவு (i) இன் இலகுச்சுட்டி 47% ஆகவும் (iii)இன் இலகுச்சுட்டி 43% ஆகவும் காணப்படுகின்றன.

## 1.3.5 வினாப்பத்திரம் III - வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்





இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் - 1-4 வரையான வினாக்கள் கட்டாயம் தெரிவு செய்யப்பட வேண்டிய வினாக்களாகும். எனினும் முதலாம் வினாவையே 100% ஆனவர்கள் தெரிவு செய்துள்ளனர்.

**வரைபு 5** - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

## 1.3.6 வினாப்பத்திரம் III இற்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்





இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம்

1 ஆம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20 ஆகும். புள்ளிவீச்சு 00-25% இற்கிடையில் (0-5 புள்ளிகள்) 36% ஆனோரும் புள்ளிவீச்சு 26-50% இற்கிடையில் (6-10 புள்ளிகள்) 35% த்தினரும் புள்ளிவீச்சு 51-75% இற்கிடையில் (11-15 புள்ளிகள்) 23% ஆனோரும் புள்ளிவீச்சு 76-100% இற்கிடையில் (16-20 புள்ளிகள்) 5% த்தினரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு 6** - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

## 1.3.7 வினாப்பத்திரம் III இல் பெறப்பட்ட அடைவு




**வரைபு 7** (இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகின்றது.

உதாரணம் :- வினா 1 இல் உபபிரிவு (i) இன் (ஆ) பிரிவுக்கு சரியான விடையளித்தோர் 59% ஆகும். வினா I இன் (vi) ஆம் பிரிவிற்குச் சரியான விடையளித்தோர் 5% ஆகும். இதன்படி முதலாம் வினாவின் (i) இன் (ஆ) பிரிவு இலகுத்தன்மையுடையதாகவும் முதலாம் வினாவின் (vi) ஆம் பிரிவு கடினத்தன்மையுடையதாகவும் அமைந்துள்ளன.

# பகுதி II

## 2 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

### 2.1 வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

#### 2.1.1 வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு

- நேரம் :- 1 மணித்தியாலம், மொத்தம் 40 புள்ளிகள்
- இவ்வினாத்தாள் நான்கு விடைகளைக் கொண்ட 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்குமுரிய (1), (2), (3), (4) ஆகிய தெரிவுகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.
- எல்லா வினாக்களுக்கும் விடைகள் அளிக்கப்படல் வேண்டும்.
- 1-20 வரையான வினாக்கள் பெரும்பாலும் மொழி வளத்தையும்
- 21-30 வரையான வினாக்கள் இலக்கணத்திறனையும்,
- 31-40 வரையான வினாக்கள் கிரகித்தல், மொழி அமைப்பு, கலைச்சொல் அறிவு, பந்தியாக்கம் போன்ற திறன்களையும் மதிப்பிடுவனவாக அமைந்துள்ளன.

## 2.1.2 வினாப்பத்திரம் I

- தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1. 'மருள் தீர்ந்த மாசறு **காட்சியவர்**' - இங்கு காட்சி என்பதன் பொருள்
   (1) பார்வை (2) நோக்கம் (3) அறிவு (4) தெளிவு

2. '**அளகக்** காட்டை மிதிக்கும் கயற்கண்ணி' - அளகம் என்பது
   (1) வடிவு (2) கூந்தல் (3) பெருமை (4) அழகு

3. '**ஆழி**வாய்ச் சத்த மடங்காதோ' - இங்கு ஆழி என்பது
   (1) சங்கு (2) சிங்கம் (3) சக்கரம் (4) கடல்

4. '**நல்கூர்ந்தார்** போல வருஞ் செல்லும்' - நல்கூர்ந்தார் என்பதன் ஒத்த கருத்துள்ள சொல்
   (1) வறியவர் (2) செல்வர் (3) இளையவர் (4) முதியவர்

5. '**வாலைப்** பருவ வாழை இலைகள்' - வாலை என்பதன் எதிர்க்கருத்து
   (1) முதிர்ந்த (2) வாலுள்ள (3) காய்ந்த (4) இளைய

- பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

6. ஆண் மாடு எருது; ஆண் மான்
   (1) குருளை (2) ஏறு (3) கலை (4) பிணை

7. சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், சர்வோதயம் முதலானவற்றைக் குறிப்பதற்கு நடைமுறையில் பயன்படும் பொதுச்சொல்
   (1) அரச நிறுவனங்கள் (2) அரச சார்பற்ற நிறுவனங்கள்
   (3) திணைக்களங்கள் (4) சர்வதேச சபைகள்

8. பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றுக்கு **வாசகர்கள்** என்பது போல தொலைக்காட்சி, வானொலி, சினிமா என்பவற்றுக்கு
   (1) நேயர்கள் (2) ரசிகர்கள் (3) பார்வையாளர்கள் (4) சபையோர்

9. பிரபந்தம் என்ற சொல்லுக்கு நிகராகத் தமிழில் வழங்கும் சொல்
   (1) காவியம் (2) பெருங்காப்பியம் (3) சிற்றிலக்கியம் (4) பேரிலக்கியம்

10. 'இன்று வெகுஜனங்களின் ஊடகமாக மொழி வளர்ந்துள்ளது' - **வெகுஜனங்கள்** என்பதன் பொருள்
    (1) நிறைந்த மக்கள் (2) மேன்மக்கள் (3) ஒருபகுதி மக்கள் (4) பொதுமக்கள்

11. 'கல்யாணி ராகத்தின் அவரோகணம் போல அவளுடைய சௌந்தர்யம் இனிமையானது' - **அவரோகணம்** என்ற சொல்லின் பொருள்
    (1) ஏற்றம் (2) ஆரோகணம் (3) இறக்கம் (4) சமநிலை

12. 'அன்னியோன்னியத் தொடர்பில் வீழ்ச்சி ஏற்பட்டதை லிங்கம் அனுபவித்தான்' - **அன்னியோன்னியம்** என்ற சொல் உணர்த்துவது
    (1) அன்னியத்தன்மை (2) நெருக்கம்
    (3) முரண்பாடு (4) இடையீடு

13. 'அந்த வேகத்தைக் குழந்தையின் சிறிய மனம் தொடர்ந்து செல்வது சாத்தியமில்லை' - **சாத்தியமில்லை** என்ற தொடரின் பொருளைத் தரும் சொல்
    (1) இயலும் (2) பொருத்தம் (3) பிரயத்தனம் (4) அசாத்தியம்

14. 'றெயில் வண்டி வெறிபிடித்தாற்போல் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்தது' - இந்த வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள **தலைதெறிக்க** என்ற அடைமொழியால் உணர்த்தப்படுவது
    (1) பெரும் அச்சம் (2) ஒழுங்கின்மை (3) கடும் வேகம் (4) பெரும் ஆபத்து

15. 'மதுரையிலே ஒரு தமிழ்ச்சங்கம் இருந்தது என்பது கர்ணபரம்பரைச் செய்தி' - **கர்ணபரம்பரைச் செய்தி** என்றால்
    (1) மறுதலிக்க முடியாத செய்தி
    (2) நிறுவப்பட்ட உண்மை வரலாறு
    (3) நிறுவப்படாத ஆனால் வழிவழியாக நம்பப்படும் செய்தி
    (4) கர்ணனுடைய பரம்பரையால் முன்வைக்கப்பட்ட செய்தி

**16.** மேல்வருவனவற்றுள் பொருளால் வேறுபட்டு நிற்கும் சொல்
(1) செவ்வி (2) வியாசம் (3) பேட்டி (4) நேர்முகம்

**17.** இளந்தளிர்கள் 'சடசடவென ஒடிந்து கொண்டிருந்தன' - சடசட என்பது
(1) மரபுத்தொடர் (2) உவமைத்தொடர்
(3) இரட்டைக்கிளவி (4) இணைமொழி

**18.** உலகமயமாதல் என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் மற்றுமொரு கலைச்சொல்
(1) காலனித்துவம் (2) சமஸ்கிருதமயமாதல்
(3) பூகோளமயமாதல் (4) ஐக்கிய நாடுகள் சபை உறுப்புரிமை

**19.** 'உழைத்துப் பொருள் தேடாது செலவு செய்தால் எந்தப் பெருஞ் செல்வமும் தீர்ந்து போகும்' என்ற கருத்தைத் தரும் பழமொழி
(1) எறும்பூரக் கற்குழியும். (2) உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
(3) குந்தித் தின்றால் குன்றும் மாளும். (4) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

**20.** பலரும் அறியத்தக்க வகையிலும் நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்கத்தக்க வகையிலும் கல்லிலோ, உலோகத் தகடுகளிலோ அவை போன்ற பிறவற்றிலோ எழுதி வைக்கப்படும் தகவலைக் குறிக்கும் மிகப் பொருத்தமான சொல்
(1) கல்வெட்டு (2) சிலாசாசனம்
(3) சாசனம் (4) தாமிரசாசனம்

**21.** 'கிட்டத்தட்ட' என்பதற்கு இணையான பிறிதொரு இணைமொழி
(1) ஏறக்குறைய (2) ஈடும் எடுப்பும்
(3) சுமார் (4) அண்ணளவாக

**22.** மேல்வருவனவற்றுள் பெயரடியாகப் பிறந்த ஆக்கப்பெயர்
(1) அறிவு (2) கல்வி (3) கேள்வி (4) புலமை

**23.** வகர உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்த சொல்
(1) தாழ்வு (2) வறுவல் (3) சமத்துவம் (4) நழுவல்

**24.** வினைச் சொல்லில் அமைந்துள்ள குற்றெழுத்து ஒன்று நெடிலாவதன் மூலம் உண்டான ஆக்கப்பெயர்
(1) சீற்றம் (2) வீச்சு (3) கேடு (4) பேசு

**25.** போ என்பது முதல்வினையாக அமைந்த வாக்கியம்
(1) மழைவரப் போகிறது. (2) வண்டி புறப்படப்போகிறது.
(3) போக்குவரத்திலே காலம் செலவாகிறது. (4) வரப்போக அதிக செலவாகிறது.

**26.** மொழி முதலில் அகர உயிர் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) அன்னம் (2) அறிஞன் (3) அற்பம் (4) அரை

**27.** பின்வருவனவற்றுள் உயர்திணைப் பெயர்கள் யாவை?
அ - அமைச்சரவை
ஆ - அவைத்தலைவர்
இ - காதல்
ஈ - காதலி
உ - கட்டாக்காலி
(1) அ, ஆ, ஈ (2) ஆ, ஈ, உ (3) ஆ, ஈ (4) ஈ, உ

28. பன்மை உருபு பெற்று அமையத்தக்க சொல்
(1) அன்பு (2) தண்ணீர் (3) ஊர் (4) இந்தியா

29. 'நாங்கள் மட்டும்தான் ஆயுதம் வைத்திருக்கலாம்' - இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள தொகை
(1) வினைத்தொகை (2) வேற்றுமைத்தொகை (3) பண்புத்தொகை (4) உம்மைத்தொகை

30. நூறு ஆண்டுகளைக் குறிப்பது
(1) தசாப்தம் (2) சதாப்தம் (3) சகாப்தம் (4) சஷ்டியப்தம்

- பந்திகளை வாசித்து, அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

31. "நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழிநுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின்விளக்குகள் போல் இருக்கின்றன. அவற்றுள் சில பிரகாசமாகவும் இருக்கலாம். ஆனால் அவை பரவலாக அங்கிங்கெனாதபடி எங்கும் ஒளிவீசும் முழு நிலவு போன்று இல்லை."
- மேற்படி பந்தியில் ஆசிரியர் வலியுறுத்த விரும்புவது
(1) நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழிநுட்பமும் ஒளிவீசவில்லை.
(2) நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழிநுட்பமும் முழு நிலவு போன்று இல்லை.
(3) நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழிநுட்பமும் பரந்த அளவில் அறிமுகமாக வேண்டும்.
(4) நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழிநுட்பமும் மின்விளக்குப் போன்றன.

32. "கதைக்குப் பின்னே உள்ள, கதாசிரியரின் கலையாற்றல், கற்பனைத்திறன், சொல்லாட்சி, அவர் மறைமுகமாகக் கூறும் செய்தி இவ்வளவும் இலக்கண வரம்புகளை விடவும் மிகமிக முக்கியமானவையாகும். சிறந்த சிறுகதை ஆசிரியர்கள் பலரும் இலக்கண வரம்புகளை நினைத்துக்கொண்டு தம் கதைகளை எழுதுவதில்லை. பெரும்பாலும் அவை தாமாகவே அமைந்து விடுகின்றன. வேறுசிலர் தெரிந்து கொண்டே வரம்புகளை மீறிச் சிறந்த படைப்புக்களை உருவாக்கி விடுகிறார்கள்."
- மேற்படி பந்தியின் ஆசிரியருக்கு உடன்பாடில்லாத கருத்து
(1) சிறுகதையைப் பொறுத்தவரையில் அதன் இலக்கண வரம்புகளை விடவும் முக்கியமான விடயங்கள் உள்ளன.
(2) சிறந்த சிறுகதையாசிரியர்கள் இலக்கண வரம்புகளைப் பற்றிச் சிந்திக்காமலே சிறுகதைகளை எழுதுவதுண்டு.
(3) கதாசிரியர்களின் கலையாற்றல், கற்பனைத்திறன், சொல்லாட்சி முதலியன சிறுகதை இலக்கணத்தோடு சம்பந்தப்பட்டவையாகும்.
(4) சிறுகதை இலக்கணத்தை அறிந்திருந்தும் அதனை மீறியும் சிறந்த சிறுகதைகளைப் படைக்கலாம்.

- வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

33. ஊருக்குள் புகுந்து அழிவு செய்யும் காட்டு யானைகளை விரட்டும் பணியில் இராணுவமும் வனவிலங்குத் திணைக்களமும் இணைந்து
(1) ஈடுபடுகிறார்கள். (2) ஈடுபடுகிறது.
(3) ஈடுபடுகின்றன. (4) ஈடுபட்டுவருகிறார்கள்.

34. மனிதனுக்கு கல்வியைவிட பணிவு, அன்பு, ஊக்கம் முதலான உயர்குணங்கள்
(1) முக்கியமானதாகும். (2) முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
(3) முக்கியத்துவமுள்ளது. (4) முக்கியமானவையாகும்.

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமானதைத் தெரிவுசெய்க.

35. போதைவஸ்து பாவனை அதிகரிப்பால் நாடு எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக வருங்காலத்தில் ...................... நடவடிக்கைகள் தொடர்பாகத் தீவிரமாக ஆராய வேண்டும்.
(1) மேற்கொள்ளும் (2) மேற்கொள்ளப்பட வேண்டிய
(3) மேற்கொண்ட (4) மேற்கொண்டு

36. கவிஞர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள் ஆகிய ...................... சமூகப் பிரக்ஞை உள்ளவர்களாகத் தொழிற்பட வேண்டும்.

(1) கலைஞர்கள்
(2) அறிஞர்கள்
(3) இலக்கியவாதிகள்
(4) படைப்பாளிகள்

37. நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய விருப்பு வெறுப்புக்களுக்கு ...................... வாழ்ந்தால் நமது வாழ்க்கை அமைதி நிறைந்ததாக விளங்கும்.

(1) அலட்சியம் செய்து
(2) இலட்சியம் செய்து
(3) மதிப்பளித்து
(4) ஒத்துழைத்து

38. அவனுக்கு எத்தனையோ புத்திமதிகள் சொன்னேன்; ...................... அவன் கேட்கவில்லை.

(1) ஆனாலும்
(2) எனவே
(3) ஆகையால்
(4) அதை

39. வீரமாமுனிவர், தமிழ் அகராதித்துறையின் ...................... விளங்குகிறார்.

(1) மூதாதையராக
(2) முன்னோடியாக
(3) முந்தையராக
(4) முன்னோராக

● கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

40. அ - பனை ஏடுகளில் எழுத்தாணியால் எழுதுவது இலகுவானதன்று.

ஆ - அதனால்தான் சுருக்கமாகச் சொல்வதற்கேற்ற செய்யுள் நடையை எம்முன்னோர்கள் கையாண்டார்கள் போலும்.

இ - ஆனால் பண்டைக்காலத்தில் பனை ஏடும் எழுத்தாணியும் தவிர வேறு எழுதுகருவிகள் இருக்கவில்லை.

ஈ - இந்தக் காலத்தில் மிகவசதியாக எழுதத்தக்க எழுதுகருவிகள் ஏராளமாக உள்ளன.

உ - ஆகையால் பண்டைக்காலத்தில் எழுத்து வேலையை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்க வேண்டி இருந்தது.

(1) அ, ஆ, இ, ஈ, உ
(2) அ, ஈ, உ, இ, ஆ
(3) ஈ, இ, அ, உ, ஆ
(4) ஈ, உ, அ, ஆ, இ

**


### 2.1.3 எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

#### வினாப்பத்திரம் I புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|
| 01 | 3 | 21 | 1 |
| 02 | 2 | 22 | 4 |
| 03 | 4 | 23 | 2 |
| 04 | 1 | 24 | 3 |
| 05 | 1 | 25 | 4 |
| 06 | 3 | 26 | 2 |
| 07 | 2 | 27 | 3 |
| 08 | 2 | 28 | 3 |
| 09 | 3 | 29 | 2 |
| 10 | 4 | 30 | 2 |
| 11 | 3 | 31 | 3 |
| 12 | 2 | 32 | 3 |
| 13 | 4 | 33 | 3 |
| 14 | 3 | 34 | 4 |
| 15 | 3 | 35 | 2 |
| 16 | 2 | 36 | 3 |
| 17 | 3 | 37 | 3 |
| 18 | 3 | 38 | 1 |
| 19 | 3 | 39 | 2 |
| 20 | 3 | 40 | 3 |

ஒரு விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் (1 x 40) = 40 புள்ளிகள்

### 2.1.4 வினாப்பத்திரம் 1 இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும்




| வினா இல. | தொனிப்பொருள் | இலகுத்தன்மை கூடிய வினாவும் அதன் இலகுத்தன்மையும் | இலகுத்தன்மை குறைந்த வினாவும் அதன் இலகுத்தன்மையும் |
|---|---|---|---|
| 1 - 20 | மொழி வளத்தைக் கணிப்பிடல் | 3 - (92%) | 7 - (10%) |
| 21 - 30 | இலக்கணப் பயன்பாட்டுத் திறன் | 21- (46%) | 30 - (22%) |
| 31 - 40 | கிரகித்தல், மொழியமைப்பு, பந்தியாக்கம் | 39 - (85%) | 36 - (26%) |

- வரைபு 1 இலிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து தயாரிக்கப்பட்டது.
- வினாப்பத்திரம் மாணவர்களுக்குப் பொருத்தமாக அமைந்திருந்தது.
- 40 வினாக்களில் 20 வினாக்களுக்கு 50% இற்கும் அதிகமான பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர்.

**மொழி வளம் (வினா 1 - 20)**

**அவதானிக்கப்பட்ட விடயங்கள்.:-**

- மொழி வளத்தைக் கணிப்பிடும் 01-20 வரையான வினாக்களில் 3 ஆம் வினாவுக்கு 92% ஆனோர் சரியாக விடையளித்துள்ளனர்.

வினா இலக்கம் 07

- சரியாக விடையளித்தோர் 10% ஆனவர்களே. பரீட்சார்த்திகளது மொழிவள விருத்தி போதிய மட்டத்தை எட்டவில்லை.
- மொழி வளம் சார்ந்த 01-20 வரையான வினாக்களில் வினா இலக்கங்கள் 07, 08, 09, 11, 15,19, 20 ஆகிய 06 வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் விடை எழுதும் போது சரியான விடைகளைத் தெரிவு செய்வதில் இடர்ப்பாடு அடைந்துள்ளனர்.

| வினா இல. | சரியான விடையைத் தெரிவு செய்தோர் வீதம் | பிழையான விடையைத் தெரிவு செய்தோர் வீதம் |
|---|---|---|
| 07 | 10% | 90% |
| 08 | 46% | 54% |
| 09 | 27% | 73% |
| 11 | 42% | 58% |
| 15 | 34% | 66% |
| 19 | 48% | 52% |
| 20 | 30% | 70% |

**மொழிவளத்தை விருத்தி செய்வதற்கான ஆலோசனைகள்**

- வினா இலக்கம் 7, 8, 9 இற்கு உரியவை.
  தகவல் தொடர்பாடல் சார்ந்த கலைச்சொற்களையும் பல்வேறு துறைசார்ந்த கலைச்சொற்களையும் தேடிச் சேகரிக்க வைத்தல்.

  - அவற்றின் பொருள் விளக்கத்தை நன்கு விளங்கிக் கொள்வதற்கான பயிற்சிகளை வழங்கல்.
    உ-ம் : வானொலிச் செய்தி வாசிப்பு முறையைப் பின்பற்றல்.
    பத்திரிகைக்கான செய்திகளை எழுதுவித்தல்.

- கலைச்சொற்களை வைத்து வாக்கியங்களை அமைக்கவும் நாளாந்த செய்திப் பத்திரிகைகளில் சாதாரண உரையாடல்களில் அவற்றை இனங்காணவும் வேண்டிய திறன்களை வளர்த்தல்.
  உ-ம் : கலைச்சொல்லாக்க வடிவங்களை அறிதல்.
  கலைச்சொற்களை வைத்து வசனம் அமைத்தல்.

- வினா இலக்கம் 11, 15, 19, 20 இற்கு உரியவை.
  பரீட்சார்த்திகளுக்கு கொடுக்கப்பட்ட வினாக்களை முழுமை பெற வாசித்து விளங்கிக் கொள்ளப் பயிற்சியளித்தல்.

- சொற்களின் பொருளைச் சரியாக விளங்கிக் கொள்ளச் செய்தல்.
  உ-ம் :
  வேண்டினான் - வாங்கினான்
  திறந்த - துறந்த
  கிரகம் - கிருகம்
  நேயர் - இரசிகர்
  சமுகம் - சமூகம்

- பழமொழிகள், அரும்பதங்கள் என்பவற்றின் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைக்கச் செய்தல். ஒத்தவற்றை இணைக்கச் செய்தல். கட்டுரைகள் எழுதும்போது இவற்றைப் பயன்படுத்தல்.
- கருத்தூன்றிய வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துதல்.

**இலக்கணப் பயன்பாட்டுத்திறன் (வினா இலக்கம் 21 - 30)**
**அவதானிக்கப்பட்டவை**

★ இலக்கணத்தைக் கணிப்பிடும் 21 - 30 வரையான வினாக்களில் வினா இலக்கம் 21 இற்கு 46% பரீட்சார்த்திகளே சரியான விடை அளித்துள்ளனர்.

- வினா இலக்கம் 30 :

  இவ்வினாவுக்கு சரியாக விடையளித்தோர் 22% ஆனவர்களே. சொற்பொருள் பற்றிய தெளிவின்மையால் இவ்வினா கடினத்தன்மையானதாகப் பரீட்சார்த்திகளுக்கு அமைந்திருக்கின்றது.

- பழமொழிகள், அரும்பதங்கள் என்பனவற்றின் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைக்கச் செய்தல், ஒத்தவற்றை இணைக்கச் செய்தல்.
- கருத்தூண்றிய வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தல்.
- இலக்கணப் பயன்பாட்டுத் திறனைக் காணும் 21-30 வரையான பத்து வினாக்களில் 46% பரீட்சார்த்திகளுக்கு மேல் சரியான விடைகளைக் கொடுப்பதற்கு எத்தனிக்கவில்லை.

- அவற்றுள்ளும் வினா இலக்கம் 22 இற்கு 28% பரீட்சார்த்திகளே சரியான விடையளித்துள்ளனர். சொற்பாகுபாட்டில் ஆக்கப்பெயர் பற்றிய தெளிவின்மையால் இவ்வினாவிற்குப் பரீட்சார்த்திகள் 78% ஆனோர் சரியான விடையைக் காணத்தவறிவிட்டார்கள்.

- வினா இலக்கம் 25 இற்கு 29% பரீட்சார்த்திகளே சரியான விடையளித்துள்ளனர். வினைச்சொற் பாகுபாட்டில் முதல்வினை, துணைவினை என்பவற்றைச் சரியாக தெரிந்து கொள்ள முடியாத 71% பரீட்சார்த்திகள் இவ்வினாவிற்குச் சரியான விடையளிக்கத் தவறிவிட்டார்கள்.

- வினா இலக்கம் 23 இற்கு 32% பரீட்சார்திகளே சரியான விடையளித்துள்ளனர். உடம்படுமெய் பற்றிய தெளிவின்மையும் உடம்படு மெய்ப்புணர்ச்சி பற்றிய விளக்கமின்மையும் காரணமாக 68% பரீட்சார்த்திகள் இவ்வினாவிற்குச் சரியான விடையளிக்கத் தவறிவிட்டார்கள்.

**இலக்கணப் பயன்பாட்டுத் திறனை விருத்தி செய்வதற்கான ஆலோசனைகள்**

**வினா இலக்கம் 30 ற்கு உரியவை.**

- எழுத்துக்களில் ஏற்படும் மாற்றம் காரணமாக சொற்பொருளில் ஏற்படும் மாற்றங்களை அறிய வைத்தல்.

  உ-ம் : தசம் - சதம்
  சதை - தசை
  சமுகம் - சமூகம் போன்றன.

**வினா இலக்கம் 22, 23, 25 இற்கு உரியவை.**

- ஆக்கப்பெயர் அமைப்புப் பற்றியும் ஆக்கப் பெயர் விகுதிகள் பற்றியும் அறியவைத்தல்.

  உ-ம் : தொழில் + ஆளி = தொழிலாளி
  கமம் + காரன் = கமக்காரன்
  முதல் + ஆளி + துவம் = முதலாளித்துவம்

- யகர, லகர, உடம்படு மெய்கள் வரும் சொற்களை அறியச் செய்தல்

  உ-ம் : கோயில், கோவில், சுகவீனம்

- உடம்படு மெய்ப் புணர்ச்சிகளை விளங்கவைத்தல்.

  கோ + இல் : சுகம் + ஈனம்

- வினைச் சொற்பாகுபாட்டைக் கற்பிக்கும்போது அவற்றுள் முதல் வினை, துணைவினை பற்றிய விடயங்களையும் உதாரணங்களுடன் விளங்க வைத்தல; பின்னர் தேடவைத்தல்.

**கிரகித்தல், மொழிப் பிரயோகம், பந்தியாக்கம் (வினா இலக்கம் 31 - 40 வரை) அவதானிக்கப்பட்டவை.**

- 1 ஆம் வினாப்பத்திரத்தில் இப்பிரிவில் வினா இலக்கம் 39 இற்கு 89% பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர்.
- வினா இலக்கம் 36

  சரியான விடையளித்தோர் 26% பரீட்சார்த்திகளே. மேலும் வினா இலக்கம் 32, 33 என்பவற்றிற்கு முறையே 29%, 28% ஆனோர் சரியான விடையளித்துள்ளனர்.

- வினா இலக்கம் 36 இற்கு பலபொருள் குறிக்கும் ஒருசொல் தொடர்பு நிலையில் தெளிவின்மையால் 64% பரீட்சார்த்திகள் சரியான விடையளிக்கத் தவறிவிட்டார்கள்.

- வினா இலக்கம் 32 இற்கு உடன்பாடான உடன்பாடில்லாத கருத்துக்களின் தெளிவின்மையாலும் எதிர்மறையான மறுதலையான என்ற பதங்களின் பொருள் விளக்கமின்மையாலும் 71% பரீட்சார்த்திகள் சரியான விடையளிக்கத் தவறிவிட்டார்கள்.

- வினா இலக்கம் 33 இற்கு திணை, பால், எண், வேறுபாடுகளை விளங்கிக் கொள்ளாத 72% பரீட்சார்த்திகள் சரியான விடையளிக்கத் தவறிவிட்டார்கள்

**கிரகித்தல், மொழிப்பிரயோகம் என்பவற்றை விருத்தி செய்வதற்கான ஆலோசனைகள்**

**வினா இலக்கம் 36 இற்கு உரியவை.**

நாளாந்த வாழ்க்கையில் பயன்படுத்தப்படுகின்ற பலபொருள் குறிக்கும் ஒருசொல் பற்றிய விளக்கத்தைக் காணச் செய்தல்.
உ-ம் : தொடர்மொழிக்கு ஒருமொழி பற்றி விளக்கமளித்தல்.

- ஐந்திணை - இருத்தல், இரங்கல், பிரிதல், ஊடல், புணர்தல்
- ஒரு பொருள் பன்மொழி

  கவிஞர், எழுத்தாளர்கள், விமர்சகர்கள் ஆகிய சமூகப் பிரக்ஞை உள்ளவர்களாகத் தொழிற்படுபவர்கள்
  இலக்கியவாதிகள்

**வினா இலக்கம் 32, 33 இற்கு உரியவை.**

- உடன்பாடு, எதிர்மறை வடிவிலான வாக்கியங்களை வகைப்படுத்த வழிகாட்டுதல்.
- பொருள் வேறுபட்டு நிற்கும் வாக்கியங்களை இனங்காண வைத்தல்.
- சொற்களில் திணை, பால், எண், இடம் என்பவற்றைக் கூறவைத்தல்.
- அவற்றிற்குப் பொருந்தியதாக அமையும் வகையில் முடிக்கும் சொற்களைப் பயன்படுத்த பயிற்சி வழங்கல்.

### 2.1.5 வினாப்பத்திரம் I இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவுசெய்துள்ள விதம் (சதவீதத்தில்)

| வினா இலக்கம் | சரியான தெரிவு | தெரிவு செய்யப்பட்ட தெரிவின் வீதம் | | | |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | 3 | 14 | 5 | 63 | 18 |
| 2 | 2 | 7 | 74 | 3 | 11 |
| 3 | 4 | 2 | 2 | 4 | 92 |
| 4 | 1 | 67 | 23 | 5 | 6 |
| 5 | 1 | 50 | 5 | 12 | 33 |
| 6 | 3 | 4 | 11 | 68 | 17 |
| 7 | 2 | 21 | 10 | 14 | 55 |
| 8 | 2 | 42 | 46 | 10 | 2 |
| 9 | 3 | 30 | 30 | 27 | 13 |
| 10 | 4 | 19 | 5 | 7 | 69 |
| 11 | 3 | 22 | 17 | 42 | 19 |
| 12 | 2 | 9 | 68 | 16 | 7 |
| 13 | 4 | 4 | 19 | 15 | 62 |
| 14 | 3 | 4 | 7 | 83 | 6 |
| 15 | 3 | 8 | 24 | 34 | 34 |
| 16 | 2 | 13 | 65 | 9 | 13 |
| 17 | 3 | 3 | 3 | 90 | 4 |
| 18 | 3 | 4 | 4 | 86 | 6 |
| 19 | 3 | 6 | 42 | 48 | 4 |
| 20 | 3 | 61 | 5 | 30 | 4 |
| 21 | 1 | 46 | 4 | 9 | 41 |
| 22 | 4 | 21 | 34 | 17 | 28 |
| 23 | 2 | 22 | 32 | 33 | 13 |
| 24 | 3 | 24 | 21 | 35 | 20 |
| 25 | 4 | 19 | 11 | 41 | 29 |
| 26 | 2 | 24 | 34 | 15 | 27 |
| 27 | 3 | 33 | 18 | 41 | 8 |
| 28 | 3 | 15 | 31 | 42 | 12 |
| 29 | 2 | 17 | 34 | 18 | 31 |
| 30 | 2 | 36 | 23 | 35 | 6 |
| 31 | 3 | 4 | 18 | 66 | 12 |
| 32 | 3 | 13 | 29 | 30 | 28 |
| 33 | 3 | 13 | 14 | 28 | 45 |
| 34 | 4 | 18 | 18 | 4 | 60 |
| 35 | 2 | 18 | 71 | 8 | 3 |
| 36 | 3 | 24 | 16 | 27 | 33 |
| 37 | 3 | 5 | 3 | 56 | 36 |
| 38 | 1 | 55 | 3 | 4 | 38 |
| 39 | 2 | 8 | 84 | 3 | 5 |
| 40 | 3 | 9 | 11 | 72 | 8 |

ஒவ்வொரு வினாவின் கீழும் சரியான விடையைத் தெரிவு செய்த மாணவர் சதவீதம் நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது.

## 2.2 வினாப்பத்திரம் II ற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள்

### 2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு

- நேரம் :- 2 மணித்தியாலங்கள் (மொத்தப் புள்ளிகள் 80)
- இவ்வினாப்பத்திரம் 5 வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

1. குறுவிடை வினாக்கள் 10. ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்
2. கட்டுரை எழுதுதல் வழிகாட்டற் குறிப்புகளுடனான **நான்கு** கருப்பொருள்களுள் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும் - 25 புள்ளிகள்
3. சுருக்கம் எழுதுதல் 10 புள்ளிகள்
4. கிரகித்தல் தொடர்பான வினாக்கள் 10 புள்ளிகள்
5. நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுதல் 15 புள்ளிகள்

**வினாப்பத்திரம் II இற்கான மொத்தப் புள்ளிகள் = 20+25+10+10+15 = 80 புள்ளிகள்**

## 2.2.2. வினாப்பத்திரம் II எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்

**வினா இல. 1**

**1. சுருக்கமான விடை எழுதுக.**

(i) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
'வருஞ்செல்லும் பேருமென் நெஞ்சு'

(ii) 'காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர் தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்.'

(அ) 'சேடி' என்பதன் பொருள் யாது?

(ஆ) இங்கு ஆறாம் வேற்றுமை ஏற்ற நிலையில் உள்ள படர்க்கைப் பெயர் யாது?

(iii) 'குஞ்சம்மாள், இயந்திரம்போலச் சொன்னதையெல்லாம் செய்தாள்.' - இதில் இடம்பெற்றுள்ள அணியை விளக்குக.

(iv) பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றுக.
"நீங்க அப்பிடித்தான் சொல்லுவியள்."

(v) பின்வரும் கவிதைப் பகுதியின் எழுவாய், பயனிலைகளைக் குறிப்பிடுக.
'துள்ளிப்படர்ந்து தொடருகிற காலமும்
சற்று நின்று பின்னோக்கித் தாமதிக்கமாட்டாது'

(vi) 'ஆள்' என்பது பெயராகவும் வினையாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வோர் வாக்கியம் எழுதுக.

(vii) 'ஒருவேளை, அக்கா, நோன்பிற்காக நீ இங்கே இருந்து விட்டதுதான் அத்திம்பேருக்குக் கோபமோ?' - 'அத்திம்பேர்' என்பதற்கு ஈடாக இலங்கைத் தமிழில் வழங்கும் உறவுப்பெயர்கள் **இரண்டு** தருக.

(viii) அத்தடாகத்தினுள்ளே 'பொன்னின்மடப்பாவை போய்ப்புக்காள்' உருவகத்தால் விழித்தாமரை பூத்த மண்டபம் ஒரு தடாகமாகவே, புகுந்த மடப்பாவை, நீரில் நீந்தும் - ஒயிலாக அசைந்து திரியும் - பட்சியாக எமது கருத்தில் இடம் பெற்று விடுகிறாள்.

- இவ்வுரைப்பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள நிறுத்தக்குறிகள் யாவை?

(ix) நாடக அளிக்கையைப் பொறுத்தவரையில், பின்வருவோருள் அத்தியாவசியம் இல்லாதவர் யார்?
நடிகர், நாடகாசிரியர், நெறியாளர், ஒளிப்பதிவாளர், ஒளியமைப்பாளர்

(x) 'சரணாலயத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட மக்களைத் தாக்கிய காட்டுயானை'
மேலே காண்பது பத்திரிகைச் செய்தி ஒன்றின் தலைப்பு. அத்தலைப்பில் உள்ள மயக்கத்தைத் தவிர்த்து தெளிவான முறையில் அதனைத் திருத்தி எழுதுக.

(20 புள்ளிகள்)

**1 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

**வினா இல. 1**

(i) வரும் + செல்லும் + பேரும் + என் + நெஞ்சு
வரும் செல்லும் பேரும் என் நெஞ்சு

(ii) (அ) தோழி / பாங்கி / நண்பி

(ஆ) தன் / தான்

(iii) உவமையணி
உவமானம் - இயந்திரம்
உவமேயம் - குஞ்சம்மாள் செயற்பாடு / செயற்பட்ட விதம்
பொதுத்தன்மை - சிந்தனையற்ற இயக்கம்
உவமை உருபு - போல

(iv) நீங்கள் அப்படித்தான் சொல்வீர்கள் / சொல்லுவீர்கள்

(v) எழுவாய் - காலம்
பயனிலை - தாமதிக்கமாட்டாது

(vi) பெயர் : ஆள் - மனிதன்
வினை : ஆள் - ஆட்சி செய்தல்
(உ + ம் - பெயர் - ஆள் ஒருவர் என்னை வந்து சந்தித்தார்)
(உ + ம் - வினை - அரசன் நாட்டை ஆள்கிறான்.)

(vii) அத்தான், மச்சான்,மைத்துனன், மச்சினன்

(viii)
* மேற்கோள் / அனுவாதம்
* காற்புள்ளி / உறுப்பிசைக்குறி
* விட்டிசை / சிறுகோடு
* முற்றுப்புள்ளி / முற்றுத் தரிப்பு

(ix) ஒளிப்பதிவாளர்


(x)
* மக்களைத் தாக்கிய காட்டுயானை சரணாலயத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

அல்லது

* சரணாலயத்துக்கு கொண்டு செல்லப்பட்ட காட்டுயானை மக்களைத் தாக்கியது.


(2 × 10 = 20 புள்ளிகள்)

**1ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




முதலாம் வினா கட்டாயம் விடையளிக்க வேண்டிய வினாவாக அமைந்தாலும் 99% ஆனவர்களே இதற்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.
16-20 வரையான பரம்பலில் 7% ஆனோரும்
11-15 வரையான பரம்பலில் 35% ஆனோரும்
06-10 வரையான பரம்பலில் 36% ஆனோரும்
00-05 வரையான பரம்பலில் 22% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 7% த்தினரே 16 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 22% ஆனோர் 5 இற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




வினாப்பத்திரம் II இல் 10 குறுவினாக்களைக் கொண்ட 1 ஆம் வினாவில் (i), (iv), (v) ஆகிய வினாக்கள் இலகுத்தன்மை வாய்ந்தனவாக அமைந்துள்ளன.

வினா (ii) இன் 'ஆ' விற்கு மிகக் குறைவானவர்களே சரியாக விடையளித்துள்ளனர். வினா (ix) இலகுதன்மை குறைந்ததாகக் காணப்படுகின்றது.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- தொடரிலுள்ள சொற்களின் பொருளறிந்து பிரித்து எழுத இடர்ப்பட்டமை.
- வேற்றுமை ஏற்ற நிலையிலுள்ள படர்க்கைப் பெயர் என்ற தொடரின் பொருளை விளங்கிக் கொள்ள முடியாமை.
- உவமை அணியில் உவமான உவமேயத்தை இனங்கண்ட போதும் பொதுத்தன்மையை இனங்காண முடியாமை.
- பேச்சு வழக்கு வாக்கியத்தை எழுத்து வழக்காக மாற்றும்போது காலங்காட்டும் வினைமுற்று வடிவம் மாற்றமடையும் விதத்தினைக் கவனத்திற் கொள்ளாமை
- ‘ஆள்’ என்ற சொல்லின் வினைமுற்று வடிவத்தைச் சரியாகக் கையாள முடியாமை.
- சமூகக் கிளைமொழிகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாமை.
- அளிக்கை, ஒளிப்பதிவாளர் போன்ற கலைச்சொற்களின் பொருளைச் சரியாக விளங்கிக் கொள்ள முடியாமை.
- கருத்துத் தெளிவாகப் புலப்படும் விதத்தில் சொற்களை வாக்கியத்தில் அமைக்கத் தவறியமை.
- மேலதிகமாகச் சொற்களையும் சேர்த்து வாக்கியத்தின் கருத்தைப் புலப்பட வைத்தமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- தொடரிலுள்ள சொற்களின் பொருள் விளங்க பிரித்து எழுதும் பயிற்சிகளை வழங்குதல். செய்யுட்பகுதிகளைக் கற்பிக்கும்போது தொடர்களைப் பிரித்துக் கூறும் பயிற்சிகளை வழங்குதல்.
- செய்யுள்களைக் கற்பிக்கும்போது அதில் இடம்பெறும் வேற்றுமைகள், தொகைகள், முற்று, எச்சவினை போன்றவற்றை எடுத்துக்காட்டி விளக்குதல். அதில் மாணவர்களுக்கு தெளிவேற்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தல்.
- உவமையணியில் உவமான உவமேயங்களுக்கிடையிலான தொடர்பினை எடுத்துக்காட்டும் பொதுத்தன்மையை இனங்காண்பதற்கான பயிற்சிகளை வழங்குதல்.
- பேச்சுவழக்கு வாக்கியத்தை எழுத்துவழக்காக மாற்றும்போது வினைமுற்றுச் சொல் காட்டும் காலத்திலேயே வாக்கியம் இடம்பெற வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்திப் பயிற்சியளித்தல். தினமும் பயன்படுத்தும் பேச்சுவழக்கு வாக்கியங்களைச் சேகரித்து அட்டவணைப்படுத்தி அவற்றை எழுத்துருவமாக பயிற்சியளித்தல்.
- ‘ஆள்’ என்ற சொல்லின் வினைவடிவம் ஆட்சி செய்தல் என்பதால் ‘ஆண்டான்’ என்பதும் சரியானதே என்பதை எடுத்துக்காட்டுதல். இதுபோலவே கேள், காண் என்ற வினையடிகள் முற்றாக வரும்போது மாற்றமடைவதை எடுத்துக்காட்டி வாக்கியங்களை எழுதும் பயிற்சிகளில் ஈடுபடுத்தல்.
- பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த சிறுகதைகளை வாசிக்கச் செய்து அவற்றில் வரும் சமூகக் கிளைமொழிகளின் பொருள் தொடர்பான விளக்கங்களை வழங்கி கலந்துரையாடல் மூலம் மேலதிகத் தெளிவை ஏற்படுத்தல்.
- பாடநூலிலுள்ள கதைகளை நாடகமாக்குதல், அரங்கேற்றுதல் ஆகிய செயற்பாடுகள் மூலம் நவீன அரங்கியல் தொடர்பான கலைச்சொற்களில் பரிச்சயம் உண்டாக்குதல்.
- வாக்கியத்தின் எழுவாய், பயனிலை அவற்றின் அடைமொழிகள் தொடர்பாகத் தெளிவுபடுத்தி வழுவற்ற வாக்கியங்களை எழுதுவதற்குப் பயிற்சியளித்தல்.

**வினா இல. 2**

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) வெகுஜன தொடர்பு சாதனங்கள் சமூகத்துக்கு வேண்டிய தகவல்களைப் பரவச் செய்யவும், சமூக அபிப்பிராயம் ஒன்றை உருவாக்கவும் வல்லவை. ஆனால், பெரும்பாலான ஊடகங்கள் வெறும் பொழுதுபோக்குச் சாதனங்களாகவே இயங்குகின்றன. இலாபம் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்டு பொறுப்பற்ற வகையில் நடந்து கொள்கின்றன. இவ்வாறான சூழலில் ஊடகங்களின் சமூகப் பொறுப்பை வலியுறுத்தும் வகையில் ஒரு **கட்டுரை.**

(ii) ஆற்றலும் பிரபலமும் வாய்ந்த ஓர் இலக்கிய கர்த்தாவைச் சந்தித்து, இலக்கியம் பற்றிய அவரது கோட்பாடு, இலக்கிய உலகின் இன்றைய போக்கு, இலக்கியத்துறையில் அவர் சாதித்தவை என்பவைகுறித்து அவரிடம் நீர் கண்ட ஒரு **பேட்டி.**

(iii) நீர், உலகின் அத்தியாவசிய தேவைகளுள் ஒன்று; உயிர்களின் வாழ்வாதாரமானது; அது இயற்கையின் கொடை; எனினும் வரையறைப்பட்ட அளவிலேயே கிடைப்பது; ஆனால் மனிதன் நீரை மாசுபடுத்துவதோடு வீண் விரயமும் செய்கிறான். அதைத் தடுப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஒரு **மேடைப் பேச்சு.**

(iv) வறிய குடும்பத்தில் பிறந்த சீலன் நல்லொழுக்கமும் இரக்க சுபாவமும் வலிய முயற்சியும் உடையவனாக இருந்த போதிலும் படிப்பில் கெட்டிக்காரனாகக் காணப்படவில்லை. அவனது ஆசிரியர்களும் சகமாணவர்களும் சீலனை ஏளனம் செய்வார்கள்; காலம் கடந்தது; சீலனோடு கற்ற மாணவர்கள் பலர் வாழ்க்கையில் அதிகம் வெற்றிபெறவில்லை; சீலன் சுயமுயற்சியால் பிரபலமானவனாகவும் பணக்காரனாகவும் ஆனான். சிறுவயதில் சீலனை ஏளனம் செய்து மனதைப் புண்படுத்திய ஒருவன் இக்கட்டான ஒரு சூழ்நிலையில் சீலனின் உதவியால் காப்பாற்றப்படுகிறான். அந்நிலையில் சீலனோடு தொடர்புபட்ட கடந்த காலத்தை அவன் நினைவில் மீட்கும் பாங்கிலான ஒரு **சிறுகதை.**

**2 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(i) **விளக்கக் கட்டுரை**

**தலைப்பு : ஊடகங்களின் இன்றைய நிலை / ஊடகங்களின் சமூகப் பொறுப்பு / சமூகமும் வெகுசன தொடர்பு சாதனங்களும்**

**(இவை போன்ற பொருத்தமான தலைப்பு)**

✻ வெகுசனதொடர்பு சாதனங்கள் என்றால் என்ன என்பது பற்றிய விளக்கம்

✻ ஊடக வகைகள்
- அச்சு ஊடகங்கள் :- பத்திரிகை, சஞ்சிகை
- இலத்திரனியல் ஊடகங்கள் :- தொலைக்காட்சி, வானொலி, இணையம்

✻ ஊடகங்களுக்குள்ள ஆற்றலும் வாய்ப்புக்களும்

✻ வகுசன தொடர்பு சாதனங்களின் பயன்பாடு
- சமூகத்துக்கு தேவையான தகவல்களைப் பரப்புதல்
- சமூக அபிப்பிராயத்தை உருவாக்குதல்
- அறிவு தரும் பொழுதுபோக்குச் சாதனங்களாகத் தொழிற்படல்

✻ இன்றைய நிலையில் ஊடகங்கள்
- சமூகத்தைக் குழப்பும் அல்லது தவறாக வழிநடத்தும் நிகழ்ச்சிகள்.
- வணிக நோக்கு
- அறிவுப் பரம்பலைக்காட்டிலும் கவர்ச்சி / கிளர்ச்சி ஊட்டுவதில் கூடிய நாட்டம்
- தவறான மொழிப்பிரயோகங்கள்

✻ ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.
- சமூகப் பயன்பாடுள்ள விடயங்களைத் தர வேண்டும்.
- பொறுப்புணர்வோடு வெளிப்படுத்த வேண்டும்.
- மொழிப்பிரயோகத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

**(ii) பேட்டி**

**தலைப்பு : இலக்கியமும் இன்றைய உலகும் / இலக்கியமும் நாமும் / ஓர் இலக்கியவாதியின் அனுபவங்கள் / இலக்கியச் சாதனையாளருடன் ஒரு சந்திப்பு**

* பேட்டிக்குரிய விடயங்கள் உள்ளடங்கியிருக்க வேண்டும்.
  - விளித்தல், வணக்கம் தெரிவித்தல்
  - அன்னியோன்யமான உரைப்பாங்கு
  - அனுபவங்களை, அறிவை வெளிக்கொணரல்

* இலக்கியம் பற்றிய கோட்பாடு
  - சமூகத்தை மாற்றும் ∴ நெறிப்படுத்தும் வகையில் அமைதல்
  - தரமான இலக்கியங்களை உருவாக்குதல்
  - உலகத் தரத்துக்கு இணையான வெளிப்பாடுகளும் ஆக்கங்களும்
  - தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள்

* பொருத்தமான வினாக்களை வினவி அதன்மூலம் பேட்டியை நகர்த்தல்.
  - கவிதை, நாடகம், சிறுகதை, நாவல் முதலானவை தொடர்பாக
  - இலக்கியத்தின் சமூகப் பயன்பாடு தொடர்பாக
  - இலக்கியத் தரம் தொடர்பாக
  - இலக்கியத்தின் அழகியல் தொடர்பாக
  - இலக்கியவாதியின் சாதனை தொடர்பாக

**(iii) மேடைப் பேச்சு**

**தலைப்பு : நீரின் முக்கியத்துவம் / நீரின் மகத்துவம் / நீர் வளம் பேணுவோம்**

* முகவுரை - சபை வணக்கம்

* நீரின் முக்கியத்துவம்
  - இயற்கையின் கொடை
  - உலகின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்று
  - வரையறுக்கப்பட்ட வளம்
  - அருகிவரும் வளம்
  - நீரின் தட்டுப்பாட்டால் ஏற்படக்கூடிய விளைவுகள்

* நீர் மாசடைதலும் வீண் விரயமாதலும்

நீர் மாசடைவதற்கான காரணங்கள்

- குப்பைகள்,கழிவுகளை நீரில் வீசுதல்
- தொழிற்சாலைக் கழிவுகள் நீரில் சேருதல்
- பொது நீர்நிலைகளில் மிருகங்களைக் குளிப்பாட்டுதல்,ஆடைகளைக் கழுவுதல்
- விவசாய கிருமிநாசினிகள் கலத்தல்

நீரை வீண் விரயமாக்கும் செயற்பாடுகள்

- நீரைத் தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்தல்
- நீர்க் குழாய்களைச் சரியாக மூடாமை
- நீர்ப்பாசனங்களிலும் நீர்விநியோகத்திலும் ஏற்படும் உடைப்பு முதலானவற்றைக் கவனிக்காமை.

* நீரைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்
  - நீர் மாசடைதலைத் தடுத்தல்
  - வீண் விரயத்தைத் தடுத்தல்
  - மக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்

* முடிவுரை


(iv) **சிறுகதை**
**பொருத்தமான தலைப்பு**
**(சிறுகதை கடந்த காலத்தை மீட்பதாக அமைதல் வேண்டும்.)**

* சிறுகதைக்குரிய அமைப்பு பேணப்படல்
* வழங்கப்பட்ட குறிப்புக்களுக்கு அமைய கற்பனையாக எழுதப்படல்
* கதைக்கருவினை சுவைபட நகர்த்திச் செல்லல்
* இயல்பான, கவர்ச்சியான கதையோட்டம்
* பொருத்தமான கவர்ச்சியான மொழிநடை
* இயல்பான பாத்திர உரையாடல்கள்
* படிப்பினை மறைமுகமாக வெளிப்படல்
* முடிவு பொருத்தமாக அமைதல்

**(25 புள்ளிகள்)**

**2 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**


**2 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




2ஆம் வினா கட்டாயம் தெரிவு செய்யப்பட வேண்டிய வினாவாக அமைந்தாலும் 98% ஆனவர்களே இவ்வினாவுக்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவுக்கு வழங்கப்படும் மொத்தப் புள்ளிகள் 25 ஆகும்.
19-25 வரையான புள்ளிப் பரம்பலில் 14% ஆனோரும்
13-18 வரையான புள்ளிப் பரம்பலில் 49% ஆனோரும்
07-12 வரையான புள்ளிப் பரம்பலில் 27% ஆனோரும்
00-06 வரையான புள்ளிப் பரம்பலில் 10% ஆனோரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 14% த்தினரே 19 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 10% ஆனோர் 6 இற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**2ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுத்தன்மை**




வினாப்பத்திரம் II இல் 2 ஆம் வினாவானது கட்டுரை வினா கட்டாயமானதாகும். இதில் (i) ஆம் பகுதியின் இலகுத்தன்மை 47% ஆகும். இலகுத்தன்மை குறைந்தனவாக (ii), (iv) பகுதிகள் உள்ளன.

**விடையளித்தலில் அவதானிக்கப்பட்டவை**

- கட்டுரை வினாவில் விளக்கக் கட்டுரை, மேடைப்பேச்சு என்பவற்றையே பரீட்சார்த்திகள் அதிகம் தெரிவு செய்துள்ளனர்.
- 'பேட்டி' தொடர்பான கட்டுரையைத் தெரிவு செய்தோரின் வீதம் குறைவானதாகும். (24%)

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- கட்டுரையில் கொடுக்கப்பட்ட வழிகாட்டற்குறிப்புகளை அவதானித்து கட்டுரை எழுதப்படவில்லை.
- மொழிச்செம்மை திருப்திகரமாக அமையவில்லை.
- பொருத்தமான இடங்களில் பழமொழிகள், உவமைகள், மேற்கோள்கள் போன்றவற்றைக் கையாண்டு கட்டுரை எழுதப்படவில்லை.
- கட்டுரை அமைப்பு முழுமையாகப் பேணப்படவில்லை.
    - உரிய இடங்களில் உரிய நிறுத்தக்குறிகள் இடப்படவில்லை.
    - பந்திகள் ஆரம்பிக்கும் இடங்கள் ஒழுங்கற்று அமைந்திருந்தன.
    - பந்திகளுக்கிடையில் இடைவெளிகள் விடப்பட்டிந்தன.
    - எழுத்துத் தெளிவு, நேர்த்தி (உறுப்பமைவு) என்பன திருப்திகரமாக அமையவில்லை.
    - தலைப்புக்கள் வாக்கிய வடிவில் எழுதப்பட்டிருந்தன.
    - பந்திகளுக்கிடையே தொடர்பின்மை காணப்பட்டமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**
**கட்டுரை எழுதுதல்.**

- வழிகாட்டற் குறிப்புகளை வாசித்து விளங்கிக்கொண்டு அவற்றுக்கேற்றவாறு கட்டுரைகளை எழுத வழிப்படுத்தல்.
- ஆரம்பம், தொடருரை, முடிவுரை என்பன கட்டுக்கோப்பாக அமையும் விதத்தில் சட்டகம் அமைத்துக் கட்டுரை எழுதும் பயிற்சிகளை வழங்குதல்.
- ஒரு விடயம் பற்றி ஒரு பந்தியில் விரித்து எழுதப் பழக்குதல்.
- பந்திகளை அமைக்கும்போது பந்திகளுக்கிடையில் தொடர்ச்சி பேணப்படுவதை கவனத்தில் கொள்ளுமாறு செய்தல்.
- உரையாடல், செவ்வி என்பவற்றை எழுத முன்னர் தலைப்புக்குப் பொருத்தமான கருத்துக்கள் கட்டுக்கோப்பாக அமையும் விதத்தில் வினாக்கள் விடைகள் என்பவை பற்றிய சட்டகமொன்றை வகுத்து வழிப்படுத்தல்.
- சிறுகதை எழுதும்போது முதலில் கதையில் வரும் கதாபாத்திரங்கள், களம், கதையை நகர்த்த வேண்டிய பாங்கு என்பவற்றைச் சிந்தித்து திட்டவரைபொன்றைத் தயாரித்த பின்னர் எழுதத் தொடங்குவதற்குப் பயிற்சியளித்தல். கதை எழுதுபவர் கதாபாத்திரங்களாக மாறி கதையெழுதும் பயிற்சியை வழங்குதல். தேவையான இடங்களில் குறியீடுகளை பயன்படுத்தப் பழக்குதல்.சிறுகதைக்கே உரிய சிறப்பான உருவக அமைப்பைப் பின்பற்ற வழிப்படுத்தல்.
- கட்டுரை அமைப்புத் தொடர்பாகவும் அதில் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களான நிறுத்தக் குறிகள், பந்தியமைப்பு, உறுப்பமைவு போன்ற விடயங்களையும் வலியுறுத்திக் கூறி வழிகாட்டல்.
- கட்டுரை எழுதும்போது கட்டாயமாக பொருத்தமான பழமொழிகள், உவமைத்தொடர்கள், மேற்கோள்கள் என்பவற்றைக் குறிப்பிட்டு எழுதுவதற்குப் பயிற்சிகள் வழங்கல்.
- தலைப்பு சுருக்கமாகவும் கவர்ச்சியாகவும் எழுதுவதற்குப் பயிற்சிகள் வழங்குதல்.
- தலைப்பு முற்று வாக்கியங்களாகவோ வினா வாக்கியங்களாகவோ அமையக் கூடாது என்பதில் கவனம் செலுத்தல்.
- இலக்கணப் பிழைகளைத் தவிர்ப்பதற்காக சிறிய வசனங்களை எழுதப் பழக்குதல்.
- கட்டுரை எழுதுவதற்கான பயிற்சிகள் அதிகம் வழங்கப்படல்.
- எழுதப்பட்ட கட்டுரைகள் திருத்தப்பட்டு பின்னூட்டல் வழங்கப்படல்.

**வினா இல.** 3

**3.** கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் **சுருக்கத்தை** 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

சீலம், திருந்திய உணர்ச்சி, ஆசாரம், கல்வி, கலை இவையெல்லாம் கூடி, பண்பாடு என்பது உண்டாகும். பண்பட்ட மனிதனுக்கும் பண்படாத பிராகிருத மனிதனுக்குமுள்ள வித்தியாசம் பண்பட்ட வயலுக்கும் பண்படாத காட்டு நிலத்திற்குமுள்ள பேதத்தைப்போல்.

பண்பாட்டை இரு வழியில் அடைகிறோம். தனி மனிதனாகத் திருத்தப்பட்டு அடைவது ஒரு வழி. மற்றொன்று, சமூகத்தில் பரம்பரையாகப் பரவி நிற்கும் பண்பாட்டின் பயனாகத் தனிப் பிரயத்தனமின்றி அனைவரும் அடையும் பண்பாடு.

கொஞ்சக் காலமாகத்தான் நாம் நம்முடைய சமூகப் பண்பாட்டைப்பற்றிச் சிந்தித்தும் பேசியும் வருகிறோம். ஒருவனிடத்திலே ஏதாவது ஒரு பொருள் ஏராளமாயிருக்குமானால், அதைப்பற்றி அவனுக்கு நினைவே இராது. நம்மிடம் இல்லாத பொருளைப் பற்றித்தான் நாம் அதிகமாகப் பேசுவோம்.

நமக்கு ஏதேனும் நோய் வந்தால்தான், நம் உடலில் ஓடும் இரத்தத்தைப்பற்றி எண்ணுகிறோம். இதயத்தைப்பற்றி எண்ணுகிறோம், வயிற்றைப்பற்றி எண்ணுகிறோம். வயிற்றிலே கெடுதல் செய்யும் பண்டத்தைத் தின்ற பிறகுதான், வயிறு இருப்பது தெரியவருகிறது. பண்பாட்டின் விஷயமும் இப்படித்தான். பண்பாடென்பது இந்திய மக்களிடையே தொன்றுதொட்டு வந்த ஒரு செல்வம். இப்படி ஒரு செல்வம் நமக்கிருப்பதையே நாம் உணரவில்லை. அயலார் வந்து சொன்ன பிறகுதான் இதை நாம் அறிந்தோம்.

(10 புள்ளிகள்)

**3ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

**சுருக்கம் எழுதுதல்**

**கவனிக்க வேண்டியவை**

- பிரதான கருத்து, துணைக் கருத்துக்கள்
- சொந்த மொழிநடையில் எழுதுதல்
- ஒரு பந்தியாக எழுதுதல்
- கட்டுக்கோப்பாக கருத்துச் சிதைவின்றி எழுதுதல்
- பிரதான அம்சங்களை அனுசரித்தல்
- தவிர்க்க வேண்டியன தவிர்க்கப்படல்

  (கூறியது கூறல் - உதாரணங்கள் முதலானவை)
- கருத்தமைவில் தொடர்ச்சி காணப்படல்
- குறித்த சொல்லளவில் எழுதுதல்

**முக்கிய கருத்துக்கள்**

- விழுமிய பண்புகள் ஒன்றிணைந்து பண்பாடு உருவாகும்
- பண்பாட்டை இரு வழிகளில் அடையலாம்
  - தனி மனிதனாக திருத்தப்பட்டு அடைவது
  - சமூகத்தில் பரம்பரையாகப் பரவி நிற்கும் பண்பாட்டின் பயனாக அடைவது
- கொஞ்சக் காலமாகத்தான் நாம் பண்பாட்டைப் பற்றிச் சிந்தித்தும் பேசியும் வருகின்றோம்.
- பண்பாடு என்பது இந்திய மக்களிடையே தொன்றுதொட்டு வந்த செல்வமாகக் காணப்படுகிறது.
  - பண்பாடு நம்மிடமிருப்பது என்பது நாம் உணரவில்லை அயலார் சொன்ன பிறகே உணர்கிறோம்.


**சொல்லளவு**

40 - 45 சொற்களுக்குள் இருத்தல் வேண்டும்.

46 - 54 சொற்களுக்குள் இருந்தால் புள்ளிகள் குறைக்கப்படும்.


55 சொற்களுக்கு மேற்படின் புள்ளிகள் இல்லை (10 புள்ளிகள்)

**3ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




3ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். இவ்வினாவுக்கு 98% ஆனவர்களே விடையளித்துள்ளனர்.
இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.
08-10 வரையான புள்ளிப் பரம்பலில் 11% ஆனோரும்
06-07 வரையான புள்ளிப் பரம்பலில் 31% ஆனோரும்
03-05 வரையான புள்ளிப் பரம்பலில் 39% ஆனோரும்
00-02 வரையான புள்ளிப் பரம்பலில் 19% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 7 இற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 11% ஆக இருக்கும் அதேவேளை 19% ஆனோர் 2 இற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




வினாப்பத்திரம் II இன் 3 ஆம் வினா சுருக்கம் எழுதுதல் ஆகும். இவ்வினாவின் இலகுத்தன்மை 48% ஆக உள்ளது.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- பந்தியைக் கிரகித்து மையக்கருத்து, துணைக்கருத்து என்பவற்றை இனங்காணத் தவறியமை.
- சொந்த மொழிநடையில் எழுதாது பந்தியிலுள்ள வாக்கியங்களை ஆங்காங்கு தெரிவு செய்து அவற்றை மீண்டும் எழுதியமை.
- சுருக்கத்தில் தவிர்க்க வேண்டிய விடயங்களைக் கவனத்திற் கொள்ளாமை.
- உரைப்பகுதியில் இடம்பெற்ற முக்கியமான கருத்துக்களைக் கொண்ட சுருக்கமாக அமையாமை.
- கருத்துக்கள் ஒழுங்குமுறையில் எழுதப்படாமை.
- எதிர்பார்க்கப்பட்ட சொல்லளவைக் கவனத்தில் கொள்ளாமல் எழுதப்பட்டமை. (சொல்லளவு அதிகம்)

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- உரைநடைப் பகுதியின் பிரதான கருத்து, துணைக்கருத்து என்பவற்றை இனங்காணும் உத்திகளை எடுத்துக்காட்டல்.
- சிறு சிறு உரைப்பகுதிகளைக் கொடுத்து அவற்றின் மையக்கருத்துக்கள், துணைக்கருத்துக்களை இனங்கண்டு சொந்தமொழிநடையில் கூறுவதற்கும் எழுதுவதற்கும் பயிற்சியளித்தல்.
- சுருக்கம் எழுதும்போது தவிர்க்க வேண்டிய விடயங்களை எடுத்துக்காட்டுவதுடன் அவற்றுக்கான பயிற்சிகளை வழங்குதல்.
- குறிப்பிட்ட சொல்லளவில் எழுதுவதற்குப் பயிற்சியளித்தல்.
- பாடநூலிலுள்ள உரைப்பகுதிகளை வாசிக்கும்போது உரைப்பகுதிப் பந்தியில் உள்ள முக்கியமான கருத்துகளை இனங்காணும்படி செய்தல்.
- தவிர்க்கப்பட வேண்டியவற்றை கவனத்தில் கொள்ளுதல்
- மாதிரிச் சுருக்கம் (பருமட்டச்சுருக்கம்) எழுதப்பயிற்சி வழங்கி பின் உண்மைச் சுருக்கம் எழுதப்பழகுதல்.
- மாணவர் எழுதிய சுருக்கம் திருத்தப்பட்டு பின்னூட்டல் வழங்கப்படல்.

**வினா இலக்கம் 4**

**4.** பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரண வாக்கியங்களில் விடை எழுதுக.

செக்கச்சிவந்த செங்கதிரோனும்
கிழக்கினில் வந்துவிட்டான் - புவி
மக்கள் மதிக்கண் விழித்துக் கிளம்பிட
வானில் உதித்து விட்டான்

கொக்கரக்கோவெனக் கோழியும்கூவுது
கொக்கோடு பற்பல புட்களும் மேவுது
சக்கரம் போலே ஜகம் சுழன்றாடுது
தொக்கி நின்ற இருள் சொல்லாமல் ஓடுது

பத்துத் திசையிலும் - ஜன
சக்தி முழங்கிடுதே! (செக்கச்)

கத்தும் பறவை கனிமரத்தில் வந்து
ஒற்றுமை காட்டிடுதே - தலைப்
பித்தம் பிடித்தொரு கூட்டம் தனித்தனி
பேதம் வளர்த்திடுதே!
ரத்த வியர்வைகள் சொட்ட உழைத்தவன்
நெற்றி சுருங்கிடுதே - ஏழை
உத்தமர் வாழ்வை உறிஞ்சும் உலுத்தரின்

கொட்டம் அடங்கிடுதே - மக்கள்
வெற்றி நெருங்கிடுதே! (செக்கச்)

(i) இப்பாடல் வலியுறுத்தும் பிரதான விடயம் யாது ?

(ii) இப்பாடலில் 'கண்' என்று உருவகிக்கப்படுவது எது?

(iii) இதில் இடம் பெற்றுள்ள ஒலிக்குறிப்புச் சொல் யாது?

(iv) இதில் இடம்பெற்றுள்ள உவமையை இனங்கண்டு விளக்குக.

(v) கத்தும் பறவை கனிமரத்தில் வந்து
ஒற்றுமை காட்டிடுதே - தலைப்
பித்தம் பிடித்தொரு கூட்டம் தனித்தனி
பேதம் வளர்த்திடுதே!
- இவ்வடிகளின் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(10 புள்ளிகள்)

**4 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(i) சுரண்டுபவர்களுக்கு எதிரான போராட்டத்துக்கான உழைப்பாளிகளின் ஒற்றுமை வலியுறுத்தப்படுகிறது.

(ii) மதி / அறிவு / புத்தி

(iii) கொக்கரக்கே


(iv) சக்கரம் போலே ஜகம் சுழன்றாடுகிறது
- பூமி சுழல்வதற்கு சக்கரம் சுழல்வது உவமிக்கப்படுகின்றது

(v) பறவைகள் ஒற்றுமையாக இருக்கின்றன, ஆனால் மனிதன் அறிவிழந்தவனாக பேதத்தை வளர்க்கிறான்.

(2 × 5 = 10)

**4 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**


**4 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




4 ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். எனினும் 98% ஆனவர்களே இதற்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவுக்குரிய மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.
08-10 வரையான புள்ளிப் பரம்பலில் 7% ஆனோரும்
06-07 வரையான புள்ளிப் பரம்பலில் 14% ஆனோரும்
03-05 வரையான புள்ளிப் பரம்பலில் 32% ஆனோரும்
00-02 வரையான புள்ளிப் பரம்பலில் 47% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 7 இற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 7% ஆக இருக்கும் அதேவேளை 47% ஆனோர் 2 இற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**4ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுத்தன்மை**




4ஆம் வினா ஐந்து பிரிவுகளைக் கொண்டது. பிரிவு (v) இன் இலகுதன்மை 49% மான பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர். பிரிவு (i) இன் இலகுதன்மை குறைந்ததாக உள்ளது,

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- பாடலின் பிரதான கருத்தை விளங்கிக் கொள்ள முடியாமை.
- “ஒலிக் குறிப்புச் சொல்” என்பதை இனங்காண முடியாமை.
- பூரண வாக்கியத்தில் விடை எழுதத் தவறியமை.

**அடைவுமட்டத்தினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- செய்யுள்களைக் கற்பிக்கும் போது கவிஞர் கூறவந்த முக்கிய விடயம், அதற்குத் துணையாகக் கையாளப்பட்டுள்ள விடயங்கள் என்பவற்றைக் கண்டறியும் பயிற்சிகளை மேற்கொள்ளல்.
- பாடல்களில் சொற்கள் கையாளப்பட்டுள்ள விதம் இலக்கணம் சார்ந்த விடயங்கள் என்பவற்றை எழுத்தக்காட்டி விளக்குதல்.
- பாடநூலிலுள்ள செய்யுள்களுடன் மேலதிக செயற்பாடாகவும் செய்யுள்களை வழங்கிப் பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடச் செய்தல்.
- வகுப்பறைகளில் வினவப்படும் வினாக்களுக்கு பூரணமான வாக்கியங்களில் விடைகூறவும் எழுதவும் ஊக்குவித்தல்.

**வினா இல. 5**

**5.** உமது கிராமத்தின் சனசமூக நிலையம் ஒன்றில் வாசிப்பு மாதத்தை பயன்பாடு மிக்கவகையில் நடைமுறைப்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. நிலையத்தின் செயலாளர் என்ற வகையில், வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும் வாசிப்புப் பழக்கத்தின் **வீழ்ச்சி**, அதற்கான காரணங்கள், வாசிப்பை ஊக்குவிப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் என்பவற்றை விவரித்தும் **100** சொற்களில் ஒரு **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

**அல்லது**

குடியிருப்புக்கள் நெருக்கமான நகரங்களிலும் கிராமங்களிலும் கழிவகற்றல் என்பது மிக முக்கியமான பிரச்சினையாக சூழலை மாசுபடுத்துவதாக உள்ளது. கழிவகற்றல் நடவடிக்கையில் பொதுமக்களும் உரிய அதிகாரிகளும் ஒழுங்குமுறையைக் கடைப்பிடிப்பதன் மூலம் பிரச்சினையைத் தவிர்ப்பதோடு கழிவுகளைப் பயனுடையனவாக்கவும் முடியும். இவற்றை வலியுறுத்தி, உமது பிரதேசத்தில் கழிவகற்றும் நடவடிக்கைக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரிக்கு **100** சொற்களில் ஒரு **கடிதம்** எழுதுக.

(15 புள்ளிகள்)

**5 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

**துண்டுப்பிரசுரம்**

| | | |
|---|---|---|
| அமைப்பு | - | 04 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | - | 08 புள்ளிகள் |
| மொழிநடை | - | 03 புள்ளிகள் |


**துண்டுப் பிரசுரத்தின் அமைப்பு**

- தலைப்பு
- விளிப்பு
- வெளியிடுபவர் பெயர்,முகவரி
- திகதி
- வாசிப்பின் முக்கியத்துவம்
  - அறிவுப் பெருக்கம்
  - நூல்கள் மூலம் பலருடைய அனுபவங்கள், தகவல்கள், உண்மைகளை பெறக்கூடியதாய் இருத்தல்.
  - பயனுள்ள பொழுதுபோக்கு
  - நல்ல மனப்பாங்கு உருவாக்கம்
  - மொழியாற்றல் விருத்தியடைதல்
- வாசிப்புப் பழக்கத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள்
  - நவீன தொடர்பு சாதனங்களின் பயன்பாடு அதிகரித்தமை
  - வாசிப்பில் அக்கறையின்மை
  - இயந்திரகதிப்பட்ட வாழ்க்கை
  - முறையான வழிகாட்டலின்மை

- வாசிப்பை ஊக்குவிக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள்
  - வாசிப்பின் பெறுமானத்தை உணர்த்துதல்
  - மாணவரிடையே போட்டிகளை வைத்து பரிசுகள் வழங்கல்
  - வாசிப்பு மாதம், வாரம் என ஒதுக்கி வாசிப்பு தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தல்
  - தொடர்பு சாதனங்களின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தல்
  - வீடு, பாடசாலை, சமூகம் போன்றவற்றில் நூலகங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
  - ஆசிரியர்கள், பெற்றோர்கள் முன்மாதிரியாக நடந்துக்காட்டல்


(15 புள்ளிகள்)

**5ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




இவ்வினாவும் கட்டாய வினாவாக இருந்தபோதிலும் 98% ஆனவர்களே இதற்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 15 ஆகும்.
12-15 வரையான புள்ளிப் பரம்பலில் 17% ஆனோரும்
08-11 வரையான புள்ளிப் பரம்பலில் 45% ஆனோரும்
04-07 வரையான புள்ளிப் பரம்பலில் 28% ஆனோரும்
00-03 வரையான புள்ளிப் பரம்பலில் 10% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 11 இற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 17% ஆக இருக்கும் அதேவேளை 10% ஆனோர் 3 இற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




துண்டுப்பிரசுரம், கடிதம் என்பவற்றிற்கு முறையே 52%, 56% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**
**துண்டுப்பிரசுரம்**

- துண்டுப்பிரசுரத்தின் அமைப்பில் தலைப்பு வெளியிடுவோர் விபரம் என்பன சரியாக எழுதப்படவில்லை.
- வழிகாட்டற் குறிப்பிலுள்ள விடயங்களைப் பின்பற்றி விடை எழுதப்படவில்லை.
  - வாசிப்புப் பழக்கத்தின் வீழ்ச்சி, அதற்கான காரணங்கள் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.
- கூற வேண்டிய விடயத்தை தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதாமை.
- கேட்கப்பட்ட சொல்லளவிற்குக் குறைவாகவே துண்டுப்பிரசுரம் எழுதப்பட்டிருந்தமை.

**கடிதம்**

- உள்முகவரியை எழுதும்போது யாருக்கு எழுதுவது என்ற தெளிவின்மையால் இடர்ப்பட்டமை.
- விளிக்குப் பின்னரே தலைப்பிடவேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளாமை.

**அடைவுமட்டத்தினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**
**துண்டுப்பிரசுரம்**

- துண்டுப்பிரசுரம் எழுதும்போது பொதுமக்கள் விளங்கிக் கொள்ளும் விதத்திலான சிறிய வாக்கியங்களை எழுதுவதற்குப் பயிற்றுவித்தல்.
- துண்டுப்பிரசுரத்துக்கான பொருளடக்கத்தை வழங்கி அவற்றுக்கு பொருத்தமான தலைப்பு, விளிப்பு என்பன தொடர்பாகக் கலந்துரையாடி வழிகாட்டல்.
- துண்டுப்பிரசுரத்தை எழுதும்போது கவனிக்க வேண்டிய விடயங்களை வலியுறுத்திக் கூறி எழுதுவதற்கு ஊக்கமளித்தல்.
  - கூற வேண்டியவற்றைச் சுருக்கமாவும் தெளிவாகவும் கூறல்
  - நீண்ட வசனங்களாக இல்லாதிருத்தல்.
  - கருத்துத் தொடர்பைப் பேணல்.
  - வாசிப்போரைக் கவரக் கூடியதாக இருத்தல்.
  - பொருத்தமான ஆரம்பமும் முடிவும் காணப்படுதல்.
  - உள்ளடக்கத்தை வாசிக்கத் தூண்டும் தலைப்பு அமைதல்.
  - ஆவலைத் தூண்டும் வகையிலான உத்திகளைப் பயன்படுத்தல்.

**கடிதம்**

- சட்டக மாதிரியை முன்வைத்து விளக்கமளித்தல்.
- கேட்கப்படும் கடிதம் எவ்வகைக் கடிதம் என இனங்காண வழிப்படுத்தல்.
- தொழில்முறைக் கடிதத்தில் யாருக்கு எழுதுவது என்பதைச் சரியாக விளங்கி உள்முகவரியை எழுதுவதற்கும் விடயத்திற்குப் பொருத்தமான தலைப்பிடுவதற்கும் பயிற்சியளித்தல்.
- கடிதங்களின் உள்ளடக்கம் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களாக அமைதல் வேண்டும் என்பதால் வழிகாட்டற் குறிப்புக்கள் அடங்கிய கடிதங்களை எழுதும் பயிற்சிகளை வழங்குதல்.
- கடிதங்களில் கருத்துக்கள் ஒழுங்கமைக்கப்பட்டனவாக இடம் பெறுவதை வலியுறுத்தல்.

# தமிழ்மொழியும் இலக்கியமும் - III

## 2.3. வினாப்பத்திரம் III இற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள்

### 2.3.1 வினாப்பத்திரம் III - இன் கட்டமைப்பு

நேரம் :- 2 மணித்தியாலங்கள் (மொத்தப் புள்ளிகள் 80)
(விதிக்கப்பட்ட தமிழ் இலக்கிய பாடநூல்)
(1,2,3,4 ஆகிய வினாக்கள் கட்டாயமானவை. வினாக்கள் 5,6,7 இல் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும்.)

1. குறுவிடை வினாக்கள் 10.(ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்)
2. செய்யுட்பகுதியும் உரைநடைப் பகுதியும் சேர்ந்த நான்கு உபபகுதிகள். ஒரு உபபகுதிக்கு (5 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்)
3. விருப்பு வினாக்கள் 02. அவற்றுள் ஒன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (15 புள்ளிகள்)
4. விருப்பு வினாக்கள் 02. அவற்றுள் ஒன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (15 புள்ளிகள்)
5. 5,6,7 ஆகிய வினாக்களில் யாதேனும் ஒரு வினாவுக்கு விடையளித்தல் வேண்டும். (10 புள்ளிகள்)

**வினாப்பத்திரம் III இற்கான மொத்தப் புள்ளிகள் = 20+20+15+15+10**
**= 80 புள்ளிகள்**

## 2.3.2 வினாப்பத்திரம் III - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளிவழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்

**வினா இல. 1**

**1.** (i) "சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது."

(அ) இகல் என்பதன் பொருள் யாது?

(ஆ) மேற்படி குறட்பாவின் பொருளைத் தெளிவுறுத்துக.

(ii) 'கலம்பகம்' என்ற இலக்கிய வடிவத்துக்கு அப்பெயர் அமையப்பெற்றதன் காரணத்தை விளக்குக.

(iii) "என்ன? குண்டல வர்ணனை இரண்டாயிரம் பாட்டா? ஒரு குண்டலத்துக்கு இரண்டாயிரம் பாட்டா? இல்லே இரண்டுக்கும் சேர்த்தா?"

(அ) இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

(ஆ) இக்கூற்றில் தொனிப்பது ஐயமா? அங்கதமா? ஆச்சரியமா?

(iv) "நந்திச்சீ ராமனுடை நல்நகரில் நல்நுதலைச்
சந்திச்சீர் ஆமாகில் தான்."

(அ) இதில் இடம்பெற்றுள்ள உருவகம் யாது?

(ஆ) இதில் இடம்பெற்றுள்ள பேச்சு வழக்குச் சொல்லை இனங்கண்டு அதனை எழுத்துவழக்குக்கு மாற்றி எழுதுக.

(v) "அருந்தாகத்தால் வருந்திய இருவருக்கும் தண்ணீரை எடுத்து வழங்கும் தன்மைபோல் அடுக்கடுக்காக அலைகள் கரையருகே வந்து சேர்ந்தன."

- இதில் பயின்றுள்ள அணியை இனங்கண்டு விளக்குக.

(vi) "செம்பொன் துளிர் முதிரப்
பசுமை கனக்கும்
இளவேனிற் கிளைகள்"
என்பதன் மூலம் உணர்த்தப்படுவது யாது?

(vii) (அ) 'பரந்த திறலாரை...' எனத் தொடங்கும் பழமொழி நானூற்றுப் பாடலில் பயின்றுள்ள பழமொழி யாது?

(ஆ) அதனால் உணர்த்தப்படும் உண்மை யாது?

(viii) "அவளுடைய நிறம் ஸப்த வர்ணங்களிலே ஒன்றல்ல; அவற்றுக்குப் புறம்பானது."

(அ) இங்கு 'அவள்' என்று சுட்டப்படுவது எது?

(ஆ) 'ஸப்த' என்பதன் பொருள் யாது?

(ix) "இஞ்சேருங்கோ, உங்களிடம் போஸ்ற் மாஸ்றர் வந்திருக்கிறார்."
"அப்பா லோண்டரியில் இருந்துவந்த வெள்ளை வேட்டி கட்டி நீலக்கோடுகள் உள்ள நீளக்கைச் சேட்டைப் போட்டார்."

- மேற்படி வாக்கியங்களில் உள்ள

(அ) போஸ்ற் மாஸ்றர்

(ஆ) லோண்டரி

ஆகிய சொற்களுக்குப் பதிலாக நடைமுறையில் உள்ள தமிழ்ச் சொல் **ஒவ்வொன்று** தருக.

(x) "மழை பாடுகின்றது.
அது பலகோடி தந்திகளுடைய
ஓர் இசைக்கருவி"

(அ) இங்கு இசைக்கருவியாக உருவகிக்கப்படுவது யாது?

(ஆ) அதன் தந்திகள் யாவை?

(20 புள்ளிகள்)

1 **ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

**சுருக்க விடை**

(i) (அ) பகை / மாறுபாடு

(ஆ) சொல்லில் வல்லவனாயும் சோர்வு இல்லாதவனாயும் (அவைக்கு) அஞ்சாதவனாயும் உள்ளவனை, பகைத்து / மாறுபாட்டின்கண் வெல்வது அரிது.

(ii) பலவகைப் பொருள்பற்றி வெவ்வேறு செய்யுள் வகைகளால் பாடப்படுவதால்

(iii) (அ) யாரால் - சேவகனால்
யாருக்கு - குமாரப்புலவருக்கு

(ஆ) அங்கதம்

(iv) (அ) நந்திச்சீராமன்

(ஆ) சந்திச்சீர் - சந்தித்தீர்

(v)
- தற்குறிப்பேற்றம்
- அலைகள் கரையை நோக்கி வருவது இயல்பான நிகழ்வு.
அதனை புலவர் தாகத்தால் வருந்திய இருவருக்கும் தண்ணீரை எடுத்து வழங்குவது போல என்று கூறுவது தற்குறிப்பேற்றம்.

(vi) பருவ மாற்றம்

(vii) (அ) "ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்"

(ஆ) ஒருவருடைய ஆற்றல் பிறரால் மறைக்கக்கூடியதன்று

(viii) (அ) அந்திவானம்

(ஆ) ஏழு


(xi) (அ) தபால் அதிபர் / அஞ்சல் அதிபர்

(ஆ) சலவையகம் / சலவைக்கடை / சலவை நிலையம்


(x) (அ) மழை

(ஆ) மழைச்சாரல்கள் / மழைத்தூறல்கள் (2 x 10 = 20 புள்ளிகள்)

**1ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




1ஆம் வினா கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.
16-20 வரையான புள்ளிப் பரம்பலில் 5% ஆனோரும்
11-15 வரையான புள்ளிப் பரம்பலில் 24% ஆனோரும்
06-10 வரையான புள்ளிப் பரம்பலில் 36% ஆனோரும்
00-05 வரையான புள்ளிப் பரம்பலில் 35% ஆனோரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவில் 10 உபபிரிவுகள் காணப்படுகின்றன. கடினத்தன்மையுடைய வினாக்களாக (ii), (iii) (அ), (ஆ) (iv) (அ), (ஆ), (v), (vi), (viii) (அ), (ix) (அ),(ஆ), (x) (ஆ) ஆகியன அமைந்துள்ளன. இலகுத்தன்மை கூடியனவாக (i) (அ), (ஆ), (x) (அ) ஆகிய வினாக்கள் அமைந்துள்ளன. வினா (i) இன் (ஆ) பிரிவுக்கு 59% ஆன பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- வினா (ii) - கலம்பகம் என்ற வடிவம் எவ்வாறு அமைந்திருக்கும் என்ற விளக்கமின்மை, வரைவிலக்கணம் முன்வைக்கத் தெரியாமை.
- வினா (iii) - (அ) நாடகத்தில் வரும் பாத்திரப் படைப்புக்களை இனங்கண்டு கொள்ளாமை.
  (ஆ) ஐயம், அங்கதம், ஆச்சரியம் என்ற சொற்கள் தரும் கருத்தை வெளிப்படுத்த முடியாமை, இனங்கண்டு கொள்ளாமை.
- வினா (iv) - (அ) உருவகம் பற்றிய தெளிவின்மை
  (ஆ) பாடலை சந்திபிரித்து பொருள் எழுதத் தெரியாமை. பாடல் வரிகளில் வரும் பேச்சுவழக்குச் சொல்லை, பிரதேச வழக்குச் சொல்லை இனங்காண முடியாமை.
- வினா (v) - அணியை இனங்கண்டு கொள்ளாமை.
- வினா (vi) - கவிதை வரிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறியீட்டு விளக்கத்தை வைத்துக் கருத்தை விளங்கிக் கொள்ள முடியாமை.
- வினா (viii) - சிறுகதையை வாசித்துக் கிரகித்துக் கொள்ளாமை, காட்சியமைப்பை இனங்கண்டு கொள்ளாமை.
- வினா (ix) - நடைமுறையில் பயன்படுத்தப்படும் ஆங்கிலப்பதங்களுக்கான தமிழ்ப் பதங்களை அறிந்திருக்காமை.
- வினா (x) - கொடுக்கப்பட்ட உரைநடைப் பகுதியில் வரும் உருவக வடிவங்கள், உருவக அணி பற்றிய விளக்கமின்மை

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- வினாத்தாள் III பாட அலகுகளோடு தொடர்பான மேலதிக விடயங்களை மாணவர் அறிந்து கொள்ளும் வகையில முன்வைத்தல்.
- குறிப்பிட்ட விடைகளை தெளிவாக முன்வைக்கப் பயிற்றுவித்தல்.
- கதைகளில் செய்யுட்பகுதிகளில் வரும் பாத்திர உரையாடல்களை வைத்து அப்பாத்திரங்கள் யாவை என இரசிக்கச் செய்தலும் பயிற்சி வழங்குதலும்.
- நாளாந்தப் பாவனைக்குரிய வேற்றுமொழிச் சொற்களை அறிந்து அவற்றுக்குரிய தமிழ்ப் பதங்களை இனங்காண வைத்தல்; கேட்டறிதல்.
- பல உதாரணங்கள் மூலம் அணிகள் பற்றிய தெளிவினை ஏற்படுத்தல்.

அணிகள் — சொல்லணிகள் / பொருளணிகள்

- இலக்கிய இரசனையை ஏற்படுத்தல்.
- செய்யுள்களைத் தெளிவாக வாசிக்க வைத்தல்.
- கதாசிரியர்கள், கவிஞர்கள், உரையாசிரியர்கள் தமது கருத்தை எடுத்துக் கூறக் கையாளப்பட்ட உத்திகளை மாணவர்கள் இனங்காணச் செய்தல்.

**வினா இல. 2**

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைநடைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துகளிலுள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

(அ) ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தேன் - நாணிப்
பெருஞ்செல்வர் இல்லத்து **நல்கூர்ந்தார் போல**
**வருஞ்செல்லும் பேருமென் நெஞ்சு.**

(ஆ) **பாலோ டளாயநீர் பாலாகு** மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம் - தேரின்
சிறியார் சிறுமையும் தோன்றாதாம், நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

(இ) அவிநவ அகத்திய, தண்டமிழ்ச் சாகர, தான்தோன்றிக் குமாரப்புலவர் என்பவர் நாமே. நமது பெருமை மலைமேலிட்ட தீபம். ஈயாத லோபிகள் எல்லாம் பூண்டற்றுப் போகும்படி வசை பாடுவோம். தமிழுக்குத் தீங்கு புரிவோர்கள் இலவம் பஞ்சாகப் பறக்க அறம் பாடுவோம். **'இம்' என்றால் எழுநூறும் 'அம்' என்றால் ஆயிரமுமாகக்** கவிமாரி பொழிவோம். நாம் கல்விச் சமுத்திரம். கலைமகள் இருப்பிடம்; தமிழ்க் கடலின் மடை திறந்த வெள்ளம். அதுமட்டுமா? கற்பனை பிறப்பிடம்; கவிமாரி பொழியும் மேகம்...

(ஈ) ரெயில் வண்டி வெறிபிடித்தது போல தலைதெறிக்க ஓடிக்கொண்டு இருந்தது; எங்கேயோ சென்னையில் விடியப்போகும் ஒரு காலையை நோக்கிக் கன வேகமாகப் போய்க் கொண்டிருந்தது போல் இருந்தது. **துக்கத்தில் தலையெடுக்கும் தைரியம் போலத்** தொலை இருளில் அந்த ஒளித்தொடர் விரைந்து சென்று கொண்டிருந்தது. சென்னை போய்ச் சேரும் பொழுது, எங்கள் கவலையும் அந்த இருளைப்போலப் பின் தங்கிவிடாதா? நிம்மதி காலையைப் போல அங்கே எங்களை வந்தடையாதா? இருள், நிச்சயம் கூடவராது! சென்னையில் காலைதான்! இவ்வாறெல்லாம் பேதைமனம் தன்னைத் தேற்றிக்கொண்டே இருந்தது.

(20 புள்ளிகள்)

**2ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(அ) **பொருள்:**

ஆராய்ந்தெடுத்த மணிகள் பதிக்கப்பெற்ற அணிகலன்களையும் அசைகின்ற பூமாலையையும் அணியப்பெற்ற (சேர மன்னனாகிய) கோதையைக் காண வேண்டும் என்று (ஆசை மிகுதியால்) கதவினை அடைந்தேன். பின் வெட்கத்தால் திரும்பினேன். பெரிய செல்வந்தரின் வீட்டுக்கு இரப்பதற்காகச் செல்லும் வறியவர் போல என் நெஞ்சானது, கதவினை அடைவதும் திரும்புவதுமாக உள்ளது. (3 புள்ளிகள்)

**சிறப்பு:-**

- சேரமன்னன்மேல் ஆசை கொண்ட தலைவியின் மனநிலை எடுத்துக்காட்டப்படுகிறது.
- மன்னன் உலா வரும்போது அவனது அழகைக் கண்டுவிட வேண்டும் என்னும் ஆசையால் தனது வீட்டுக் கதவினை அடைவதும் பின் வெட்கம் காரணமாகத் திரும்புவதுமாக இருக்கும் பெண்ணின் மனநிலைக்கு செல்வந்தர் வீட்டுக்கு இரக்கச் செல்லும் மானஸ்தரான வறியவர் ஒருவரது மனநிலை மிகப் பொருத்தமுற உவமிக்கப்பட்டுள்ளது. (2 புள்ளிகள்)

(3 + 2 = 5 புள்ளி)

**(ஆ) பொருள்:**

பாலோடு கலந்த நீரும் பாலாகவே தோற்றமளிக்கும் அல்லாமல் நீருக்குரிய நிறம் தெரியக் கூடியதாகத் தோற்றமளிப்பதில்லை. அது போலவே ஆராய்ந்து பார்க்குமிடத்து சிறியவர்கள் நல்ல பெரியோர்களைச் சார்ந்து நிற்பவர்களேயானால் அவர்களது சிறுமைக் குணமும் வெளித் தெரியாது மறைந்து போகும். (3 புள்ளிகள்)

**சிறப்பு:-**

- சிறியவர்களும் பெரியவர்களைச் சார்ந்து நிற்பார்களாயின் பெரியவர்களாவர் என்பதை உணர்த்துவதற்கு இந்த உவமை கையாளப்படுகிறது.
- பாலோடு நீர் கலந்தபோது பாலின் நிறம் அல்லாது, நீரின் நிறம் தெரிவதில்லை. ஆதலால் “பாலோடு அளாய நீர் பாலாகும்” என்பது பெரியவர்களைச் சார்ந்து நிற்கும் சிறியவர்களது சிறுமைக் குணம் மறைந்து விடும் என்பதை உணர்த்துவதற்குப் பொருத்தமான உவமையாக அமைகிறது. (2 புள்ளிகள்)

(3 + 2 = 5 புள்ளி)

(இ) **பொருள்:**

நவீன அகத்தியரும் குளிர்ச்சி பொருந்திய தமிழாகிய சமுத்திரமும் தாமாகவே உருவானவருமாகிய குமாரப்புலவர் என்பவர் நாமே. நமது பெருமையானது மலைமேலே ஏற்றிவைக்கப்பட்ட விளக்குப் போல எல்லோருக்கும் தெரியும்படியானது. கொடை கொடாத கஞ்சர்கள் யாவரும் முற்றாக அழிந்து போகும்படி அவர்கள் மேலே வசைபாடுவோம். தமிழுக்குத் தீமை செய்பவர்கள் காற்றிலே அடிபட்ட இலவம் பஞ்சுபோலப் பறக்கும்படியாக அவர்களை அழிவிக்கும் பாட்டினைப் பாடுவோம். “இம்” என்பதற்குள் எழுநூறும் “அம்” என்பதற்கிடையில் ஆயிரமுகமாக பெருந் தொகையான பாடல்களை மழை பொழிவது போல விரைந்து பொழிவோம். நாம் கல்வியாகிய கடலாகவும் கலைத் தெய்வத்தின் இருப்பிடமாகவும் விளங்குகின்றோம். அது மட்டுமல்ல நாமே கற்பனையின் பிறப்பிடமாகவும் கவிதையாகிய மழையைப் பொழிகின்ற மேகமாகவும் விளங்குகிறோம். (3 புள்ளிகள்)

**சிறப்பு:-**

- புலவர், விரைந்து கவிபாடும் ஆற்றல் தன்னிடம் உள்ளது என்பதைக் காட்டுவதற்கு இத் தொடரைக் கையாளுகிறார்.
- “இம்” என்று சொல்லி முடிப்பதற்குள் எழுநூறு பாடல்களும் “அம்” என்று செல்லி முடிப்பதற்குள் ஆயிரம் பாடல்களுமாக, மிகக் குறுகிய நேரத்துக்குள் பெருந்தொகையான பாடல்களைப் பாடவல்லவர் என்று உயர்வு நவிர்ச்சியாக உணர்த்தப்படுகிறது. (2 புள்ளிகள்)

(3 + 2 = 5 புள்ளி)

**(ஈ) பொருள்:**

ரயில் வண்டி வெறி கொண்டதுபோல தலை தெறிக்கும்படியாக விரைந்து ஓடிக்கொண்டிருந்தது. எங்கேயோ உள்ள சென்னையில் விடியப்போகும் காலைப் பொழுதை நோக்கியே (அந்தப் பொழுது முடிந்து விடுவதற்குள்) போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்ற எண்ணத்திலேயே மிகுந்த வேகத்துடன் போவதுபோல அந்த ஓட்டம் இருந்தது. துக்கம் மிகுந்த நிலையிலே தோன்றுகின்ற ஒரு மன உறுதியைப் போல, தொலைவிலே அந்த இருளை ஊடறுத்தபடி (ரயில் வண்டியின்) அந்த ஒளித்தெடர் விரைந்து போய்க்கொண்டிருந்தது. சென்னையைப் போய் அடையும் வேளையில் (பொழுது விடிந்து விடும் நிலையில் விலகும்) அந்த இருளைப் போலவே இப்போது எங்களுடனேயே தொடர்ந்து வரும் கவலையும் பின் தங்கிவிடமாட்டாதா? அங்கே வரும் விடியலைப் போல நிம்மதியும் அங்கே எங்களை வந்து அடையாதா? நிச்சயமாக இருள் வரக் கூடாது! சென்னையில் விடிவு தான்! இவ்வாறெல்லாம் வேதனைமிக்க மனமானது தன்னைத்தானே தேற்றிக்கொண்டேயிருந்தது. (3 புள்ளிகள்)


**சிறப்பு**

- கனத்த இருளுக்கூடாக ஓடிக்கொண்டிருக்கும் ரயிலோடு கூடவே அதிலிருந்து வெளிப்படும் ஒளியும் தொடராக ஓடிக்கொண்டிருப்பதற்கு உவமையாக துக்கத்தில் தலையெடுக்கும் தைரியம் உவமிக்கப்பட்டுள்ளது.
- துக்கம், பிரச்சினைகள் மிகுந்த வேளையிலே எவருக்கும் தம்மை அறியாமலே ஒரு தைரியம் பிறப்பதுண்டு. அது, மிகுந்த இருட்டுக்குள் புலப்படும் சிறிய ஒளித்தொடருக்குப் பொருத்தமான உவமையாக அமைகிறது. (2 புள்ளிகள்)


(3 + 2 = 5 புள்ளி)

(5 × 4 = 20 புள்ளி)

**2ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




2ஆம் வினாவும் கட்டாய வினாவாக இருந்த போதும் 97% ஆனவர்களே இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவிற்குரிய மொத்தப்புள்ளிகள் 20 ஆகும்.
16-20 வரையான புள்ளிப் பரம்பலில் 9% ஆனோரும்
11-15 வரையான புள்ளிப் பரம்பலில் 27% ஆனோரும்
06-10 வரையான புள்ளிப் பரம்பலில் 28% ஆனோரும்
00-05 வரையான புள்ளிப் பரம்பலில் 36% ஆனோரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




2ஆம் வினா 4 பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுக்கும் 39%-47% இற்கும் இடைப்பட்ட பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்துள்ளனர்.

**விடையளித்தலில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள்**

- வினா 2 இல் அ, ஆ பகுதிகளுக்கு விடையளிக்கும்போது தடித்த எழுத்துக்களிலுள்ள தொடர்களுக்கான சிறப்புக்களைக் கூறாது அத்தொடர் குறிக்கும் பொருள் எழுதப்பட்டுள்ளது.
- அத்தொடர்களுக்கான சிறப்பு விளக்கம் ஒரு தொடராக அல்லது மூன்று, நான்கு சொற்கள் கொண்ட வாக்கியமாக எழுதியுள்ளனர்.
- அணிகளை இனங்காண்பதற்கும் விளக்கி எழுதுவதற்கும் இடர்ப்பட்டுள்ளனர்.
- வினா 2 இல் இ, ஈ பகுதிகளுக்கான பொருள் எழுதும் போது தமது மொழிநடையின்றி உரைப்பகுதிகளை அவ்வாறே பிரதி செய்துள்ளனர்.
- பொதுவாக சாராம்சம், உத்திகள், இரசனைகளை இனங்காண்பதில் மாணவர்கள் இடர்ப்பட்டுள்ளனர்.

**அடைவுமட்டத்தினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- பாடல்களின் பொருளை இலகுவாக அறிந்துகொள்வதற்குரியதாக சந்தி பிரித்து, கொண்டு கூட்டிவாசிக்கும் பயிற்சியை வழங்குதல்.
- கருத்துத் தெளிவில்லாத சொற்களுக்கான பொருளை அறியச் செய்தல்.
- தமது சொந்த மொழிநடையில் பொருள் எழுதுவதற்கான பயிற்சிகள் வழங்குதல்.
- அணிப்பிரயோகங்களைப் பயிற்றுவிப்பதுடன் அணிகளை இனங்காணவும் பயிற்றுவித்தல்.
- அணிகள் தொடர்பாக எளிமை உதாரணங்களில் இருந்து கருத்து கடினமான உதாரணங்களுக்குச் செல்லல்.
- உரைநடைப் பகுதிகளின் பொருளை எழுதும்போது இலகு மொழிநடைப் பகுதியில் எழுத வழிப்படுத்தல்.
- சிறப்பினை எழுதும்போது பொருளினை திரும்ப எழுதாமால் பகுதிகளை நயந்து எதனை, எவ்வாறு சொல்ல முற்படுகின்றது என விளங்கி விடையளிக்கப் பழக்குதல்.

**வினா இல. 3**

3. **பார்வைகள்** சிறுகதையில், லிங்கம் என்ற பாத்திரம்

   (அ) குடும்பத் தலைவன்

   (ஆ) சமூக உறுப்பினன்

   (இ) அலுவலக ஊழியன்

   என்னும் மூன்று நிலைகளிலும் ஆளுமையோடு தொழிற்படுமாற்றை விபரிக்குக.

   **அல்லது**

   **நட்சத்திரக் குழந்தைகள்** என்னும் சிறுகதையில்

   (அ) குழந்தையின் வெகுளித்தனம்

   (ஆ) பெற்றோரின் இயல்பு

   (இ) மாற்றமுறும் வானத்தின் தோற்றம்

   என்பன கலாபூர்வமாகச் சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

   (15 புள்ளிகள்)

**3 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(அ) குடும்பத் தலைவன்

- நல்ல கணவன்
  - அம்மா கறுப்பு நிறம் அது ஒரு வடிவு என்று அப்பா கூறுவார்.
  - உங்களுக்கு ஊர் வேலைதான் வீட்டிலை கவனமில்லை என்று அம்மா ஏசுவா - அது பொய்க் கோபம் என்று அப்பா சொல்லுவார்.
  - அம்மா பெரிசாகப் படிக்கவில்லை ஆனால் கெட்டிக்காரி என்று அப்பா ஆச்சிக்குச் சொல்லுவார்.

- நல்லதந்தை
    - மகனுக்கு புத்திமதி கூறுதல்
    - தனது மகன் உயர்குடிப் பிள்ளைகள் கற்கும் பாடசாலையில் கல்வி கற்று உயர்ந்த நிலைக்கு வர வேண்டும் என்று ஆர்வமூட்டி வளர்ப்பவன்
    - மகனின் வினாக்களுக்கு பொறுமையாக விடையளிப்பவன்
    - தோற்றம், நடைமுறை ஆகியன குறித்து மகனால் மெச்சப்படல்

(ஆ) சமூக உறுப்பினன்

- சமூகத்தில் பல்வேறுபட்ட இடங்கள்,சூழ்நிலைக்கேற்ப நடக்கும் திறம்
    - போஸ்ற் மாஸ்ரர் வந்து "தம்பி லிங்கம்.ஒரு உதவி வேணும்" என்று தேடிவருதல்
    - சனசமூக நிலைய ஆண்டுக்கூட்டம் விடயமாக கிராம சேவகர் வருதல்
    - கோயில் பணிகளில் முன்னிற்றல்

(இ) அலுவலக ஊழியன்

- தனது தொழிலை மட்டமானதாகக் கருதாமை
- கடமை தவறாமை
- சுயமரியாதை பேணல்

(5 × 3 = 15 புள்ளிகள்)

**அல்லது**

(அ) குழந்தையின் வெகுளித்தனம்

- நட்சத்திரம் தொடர்பாக தந்தை கூறுவதை அப்படியே நம்புதல்
- ஒவ்வொரு தடவையும் உண்மை பேசும்போது ஒரு நட்சத்திரம் பிறக்கிறது என எண்ணி இன்பம் அடைவதும் நட்சத்திரம் விழும்போது யாரோ பொய் பேசிவிட்டார்கள் என துன்பமடைவதும்
- "சுவாமியினுடைய மனசு இப்போ எப்படி இருக்கும் அப்பா?" என்று கேட்பது
- "ஆஹா என்ன அழகு...." என்று இயற்கையைப் பார்த்து ஆனந்தம் அடைவது
- "நீலவானம் களங்கமற்றது ரோஹினியின் உள்ளத்தைப் போன்றது" என்ற ஆசிரியரின் கூற்று

(ஆ) பெற்றோரின் இயல்பு :-

- சிறந்த விழுமியங்களை குழந்தையின் உள்ளங்களில் பதியச் செய்ய வேண்டும் என்பதை அறிந்த பெற்றோர்.
- குழந்தையின் வினாக்களுக்கு தந்தை அக்கறையோடு பதிலளித்தல்.
- நட்சத்திரம் விழுந்ததைக் கண்டு ரோஹினி அழுததைக் கண்ட தந்தையின் துலங்கல்
- பெற்றோர் இருவரும் ரோஹினியை அன்பு பாராட்டும் விதம்
    - கண்ணே
    - ரோஹினிக் குஞ்சு
    - என் ராஜாத்தி

  என்று அழைப்பன முதலானவை
- குழந்தையின் மகிழ்ச்சியில் பெற்றோர் பங்கெடுத்தல்.


(இ) மாற்றமுறும் வானத்தின் தோற்றம்.

- மேற்றிசையில் வானில் நடக்கும் மாற்றங்களை இந்திரஜாலம் எனல்.
- சந்தியாகால வானத்தை ஒரு பெண்ணாகவும் வானத்தின் மாற்றங்களை அப்பெண்ணின் நடத்தைகளாகவும் உருவகித்தல்.
- வானத்தின் வர்ண மாற்றங்களை ஓவியத்தில் மாறிமாறிப் பூசப்படும் வர்ணங்களாக உருவகித்தல்.
- கணத்துக்குக் கணம் தோன்றும் நட்சத்திரங்கள் பற்றிய விபரிப்பு
- நட்சத்திரம் தோன்றுவதை நீலப்பட்டாடையில் சுடர் தோன்றுவதாகக் கூறல்.
- மேகங்கள் பற்றிய வர்ணனை.


(06 புள்ளிகள்)

(03 + 06 + 06 = 15 புள்ளிகள்)

**3ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




3ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 15 ஆகும்.
12-15 வரையான புள்ளிப் பரம்பலில் 5% ஆனோரும்
08-11 வரையான புள்ளிப் பரம்பலில் 23% ஆனோரும்
04-07 வரையான புள்ளிப் பரம்பலில் 35% ஆனோரும்
00-03 வரையான புள்ளிப் பரம்பலில் 37% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




3ஆம் வினாவானது இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. இவற்றில் ஒரு பகுதிக்கே பரீட்சார்த்திகள் விடை எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு பகுதியும் மூன்று உபபிரிவுகளைக் கொண்டுள்ளது.

முதல்பகுதி தொடர்பாக,
உபபிரிவு (அ) இற்கு 48% பரீட்சார்த்திகளும் உபபிரிவு (ஆ) இற்கு 46% ஆன பரீட்சார்த்திகளும் உபபிரிவு (இ) க்கு 41% ஆன பரீட்சார்த்திகளும் விடையளித்துள்ளனர்.

இரண்டாம் பகுதி தொடர்பாக,
உபபிரிவு (அ) இற்கு 37%, ஆன பரீட்சார்த்திகளும் உபபிரிவு (ஆ) இற்கு 34% ஆன பரீட்சார்த்திகளும் உபபிரிவு 'இ' இற்கு 23% ஆன பரீட்சார்த்திகளும் விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- "பார்வைகள்" தொடர்பானது.
  வினாவுக்குப் பொருந்திய வகையில் சுட்டிப்பாக விடை எழுதும் உத்திகள் தொடர்பான அறிவு பரீட்சார்த்திகளிடம் மிகக் குறைவாக அமைந்திருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.
- "நட்சத்திரக் குழந்தைகள்" தொடர்பானது.
  சிறுகதை ஆசிரியர்களின் கூற்றுக்களாக இடம்பெறுவனவற்றை உள்வாங்கிக் கிரகித்து அவற்றை வினாவுக்குப் பொருந்தியதாக எழுதுவதில் பரீட்சார்த்திகள் இடர்பாடு அடைந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

குறிப்பிட்ட ஒரு கதாபாத்திரத்தை வெவ்வேறு கோணங்களில் ஆராயும் திறனின்மை அவதானிக்கப்பட்டது,

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- தரப்பட்ட ஆக்கங்கள் பற்றியும் அவற்றின் ஆசிரியர் பற்றியும் மாணவர்கள் விளங்கிக் கொள்வதற்கு பயிற்சிகள் வழங்குதல்.
- கட்டுரைப் பகுதிகளை விளக்கும்போது அவற்றை முழுமையாகவும் பகுதி பகுதியாகவும் விளக்குதல் அவசியம்.
- கதைக்கருவைக் கலந்துரையாடிப் பெற்று மிகப் பொருத்தமானதை முன்வைத்தல்.
- பாட அலகுரீதியாக மேலதிக வினாவிடைப் பயிற்சிகள் வழங்குதல்.
- கலந்துரையாடல் மூலம் மாணவர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்த வாய்ப்புக்களை வழங்குதல்.
- கரு ஒன்றைக் கொடுத்து கதை எழுதப் பயிற்றுவித்தல்; திருத்துதல்; பின்னூட்டல்.
- பொருத்தமான இடங்களில் எடுத்துக்காட்டுகளை உதாரணங்களை வழங்குவதன் மூலம் கொடுக்கப்படும் விடைகளுக்கு வலுவூட்டச் செய்தல்.
- பாட அலகுகளில் வரும் செய்யுள், உரைநடைப் பகுதிகளை பொருத்தமான நாடகமாக்கி வாசிக்க, நடிக்கத் தூண்டுதல்.

**வினா இல.** 4

**4. கவிச்சக்கரவர்த்தி** நாடகத்தில்

(அ) கம்பர்

(ஆ) ஒட்டக்கூத்தர்

(இ) குமாரப்புலவர்

ஆகிய பாத்திரங்கள் அவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் புலப்படும் வகையில் படைக்கப்பட்டிருக்குமாற்றினைத் தெளிவுறுத்துக.

**அல்லது**

**மங்கையர்க்கரசியின் காதல்** கதையில் மங்கையர்க்கரசியின்

(அ) காதல்

(ஆ) வீரம்

(இ) சோகம்

என்பன புலப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

(அ) கம்பர்

- அதிகாரத்துக்கு அடிபணியாதவர்
- சாதாரண உழவர்களையும் போற்றுபவர்
  - ஏரெழுபது பாடியமை
  - குலோத்துங்கனை விடுத்து சடையப்பரோடு நட்புப் பூண்டமை
- அடக்கமும் அதேவேளை நிமிர்வும் தெளிவான நிலைப்பாடும் கொண்டவர்
- சரியானதை எந்த இடத்திலும் எச் சந்தர்ப்பத்திலும் எடுத்துரைக்கும் துணிவு
- நன்றியுணர்வு மிகுதி
  - சடையப்பரைப் பாடியமை
- மதிக்க வேண்டியவற்றை மதிக்கும் தன்மை
  - ஒட்டக்கூத்தரை மதித்தல்
- பொதுமக்கட் சார்பு
  - மக்களின் பேச்சு வழக்கைக் கையாளுதல்
  - சாமானிய மக்களின் விடயங்கள் உணர்வுகளை மதித்தல்

(ஆ) ஒட்டக்கூத்தர்

- அதிகார நிலையில் உள்ளவர்களோடு தன்னை அடையாளப்படுத்தும் இயல்பு
- பொறாமைக்குணமுடையவர்
- அகங்காரம் கொண்டவர்
- தன்னை மையப்படுத்திய நிலைப்பாடு
- தனது புலமை பற்றிய மிகை மதிப்பீடு
- தோல்வியில் துவண்டுவிடுபவர்

(இ) குமாரப்புலவர்

- சுயநலம்
- அதிகாரத்தில் உள்ளவர்களின் தயவைப் பெறுவதில் பேரவா
- அதற்கு குறுக்கு வழிகளை நாடுதல்
- இச்சகம் பேசுதல்
- தன்னைத்தானே வியந்து பேசுவதன் மூலமும்

சமூக மதிப்புள்ள பிறரை இகழ்ந்து பேசுவதன் மூலமும் தன்னை உயர்த்தலாம் என்ற எண்ணப்பாங்கு

(5 × 3 = 15 புள்ளிகள்)

**அல்லது**

(அ) காதல்

- கருணாகரனிடம் கொண்ட காதலில் அவள் காட்டும் உறுதி
- அவனை உயிராகக் கருதியிருத்தல்
- பயங்கரமான காட்டில், நள்ளிரவு இருட்டில் யாரும் இன்றித் தனியாகச் சென்று தன் காதலனுக்காகத் துணிவுடன் காத்திருத்தல்.
- தான் காதலிக்கும் கருணாகரனைச் சிங்கம் என்று வியத்தலும் அவனது வீரம், நடையுடை பாவனை எண்ணிப் பெருமிதம் உறுதலும்
- அன்னியனின் ஆசை வார்த்தைகளுக்கு இணங்காமை
- தன் காதலன் இறந்தது கண்டு தானும் தற்கொலை செய்து உயிர்விடல்.

(ஆ) வீரம்


- தான் நினைத்ததைச் சாதிப்பதற்கு எந்தச் சூழ்நிலைக்கும் முகம்கொடுக்கும் துணிவு
- அநியாயம் நடந்துவிட்டமை கண்டு அவள் கொள்ளும் சீற்றம்
- அந்த நிலையில் அவளது தோற்றம்
- உதவிக்கு யாரும் அற்ற தனிப் பெண்ணான போதும் தன் காதலனைக் கொன்றவனை துணிந்து தாக்கும் திறன்

(இ) சோகம்


- தன் காதலன் கொல்லப்பட்டான் என்று அறிந்ததும் ஸ்தம்பித்துப் போதல்
- காதலனின் உடல் மீது விழுந்து புலம்புதல்
- தன் எதிர்கால வாழ்வு தொடர்பாகக் கண்ட கனவுகள் யாவும் சிதைந்துவிட்டமை குறித்த கவலை
- தான் உயிர் எனக்கொண்ட காதலன் இறந்த பின்னும் தான் வாழ்வது குறித்து அவள் கொண்ட வருத்தம்
- குறையுயிராகக் கிடக்கும் காதலனின் உதட்டு அசைவை தனக்கான அழைப்பாக எடுத்துக் கொள்ளல்.

(5 × 3 = 15 புள்ளிகள்)

**4 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




இதில்,
12-15 வரையான புள்ளிப் பரம்பலில் 5% ஆனோரும்
08-11 வரையான புள்ளிப் பரம்பலில் 26% ஆனோரும்
04-07 வரையான புள்ளிப் பரம்பலில் 37% ஆனோரும்
00-03 வரையான புள்ளிப் பரம்பலில் 32% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இரு பகுதிகளைக் கொண்ட நான்காம் வினாவில் ஒரு பகுதிக்கே பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும். ஒவ்வொரு பகுதியும் மூன்று உபபிரிவுகளைக் கொண்டுள்ளது.

முதற்பகுதி தொடர்பாக,
உபபிரிவு (அ) இற்கு 49% பரீட்சார்த்திகளும் உபபிரிவு (ஆ) இற்கு 45% ஆன பரீட்சார்த்திகளும் உபபிரிவு (இ) இற்கு 41% ஆன பரீட்சார்த்திகளும் விடையளித்துள்ளனர்.

இரண்டாம் பகுதி தொடர்பாக,
உபபிரிவு (அ) இற்கு 47%, ஆன பரீட்சார்த்திகளும் உபபிரிவு (ஆ) இற்கு 44% ஆன பரீட்சார்த்திகளும் உபபிரிவு 'இ' இற்கு 38% ஆன பரீட்சார்த்திகளும் விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- ‘கவிச்சக்கரவர்த்தி’ நாடகத்தில் வினவப்பட்ட வினாக்களுக்குப் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்ட பாத்திரப்படைப்புகளில் செயற்றிறன்கள் மட்டும் விடைகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.
- குறிப்பிடப்பட்ட கதாபாத்திரங்களின் குணாம்சங்கள், செயற்றிறன்கள் என்பன பற்றிய ஒப்பீடு விடைகளில் காணப்படவில்லை.
- ‘மங்கையர்க்கரசியின் காதல்’ சிறுகதையில் வினவப்பட்ட வினாக்களுக்கான விடைகளில் மங்கையர்க்கரசியின் காதல், சோகம் என்பன புலப்படுத்தப்பட்டமை போன்று வீரம் பற்றி புலப்படுத்தப்படவில்லை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- ‘கவிச்சக்கரவர்த்தி’ நாடகத்தில் வரும் ஒட்டக்கூத்தர், கம்பர், குமாரப் புலவர் ஆகிய கதாபாத்திரங்களது குணாம்சம், கவியாற்றல், செல்வாக்கு என்பவற்றை மாணவர்கள் ஒப்பிட்டு அறிய வழிப்படுத்தல்.
- கலந்துரையாடல், ஒப்படைகள், பட்டிமன்றம் உரைச்சித்திரம் போன்ற வடிவங்களில் மாணவர்களை இயங்க வைத்தல்.
- வினாக்களுக்குப் பொருந்தியவாறு விடைகள் எழுதப் பயிற்றுவித்தல்.
- வினாக்களுக்கேற்ப விடைகளின் கூறுகளுக்கு சமபெறுமானம் வழங்கும் வகையில் விடை எழுதப் பயிற்றுவித்தல்.

  உ-ம் : மங்கையர்க்கரசியர் காதல், வீரம், சோகம் பற்றிய குறிப்புக்கள் பொருந்தும்படியாக விடைகளில் கொடுத்தல்.

## 5, 6, 7 ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.

**5. நிழலின் நினைவு** என்ற கவிதையில்

(அ) வேப்பமரமும் அதனோடு தொடர்புபட்ட விலங்குகளின் நடத்தைகளும்

(ஆ) வேப்பமரத்தின் வீழ்ச்சியும் வருங்காலம் பற்றிய நம்பிக்கையும்

கவிஞரால் அழகுறச் சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

**5ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

5. **(அ)**
- வேப்பமரம்
  - படலையைத் தாண்டியவுடன் முற்றத்திலே பெரிய உருவிலே (விஸ்வரூபமாக) நிற்றல்.
  - இளவேனிற் காலத்திலே செம்பொன் நிறத்திலே துளிர்க்கும் குருத்துக்கள் மெல்ல மெல்ல முதிர பச்சை நிற இலைகளாக மாறுதல் அவற்றின் பாரம் தாங்க மாட்டாத கிளைகள்
  - அந்தக் கிளைகளுக்கிடையே மறைந்து, மலர்ந்து உதிருகின்ற சின்னஞ்சிறிய மலர்கள்
  - கனிந்த பழங்கள்
  - முற்றி உதிரும் பொன்னிற இலைகள்
  - பட்டை வெடிப்பில் கசியும் பிசின்


- விலங்குகளும் அவற்றின் நடத்தைகளும்
  - பழங்களை உண்ணும் காக்கைகள்
  - மரமேறி விழும் அணில்
  - அணிலைத் துரத்தும் பூனை
  - பிசின் கசிவை முகரும் எறும்புக்கூட்டம்

(ஆ) ● புயலின் வரவு
- அதன் விளைவாக இவ்வளவு வளம்மிக்க மரம் அழிந்து போதல்
- ஆயினும் சிறிய வேப்பங்கன்றுகளில் ஒன்றேனும் வளர்ந்து அந்த மரம் போலவே அடுத்த அடுத்த தலைமுறைக்காயினும் வளம் கொடுக்கும் என்ற நம்பிக்கை
- அந்தக் குறியீட்டினூடாக, சமுதாயத்தின் எந்த இழப்பும் அடுத்த தலைமுறைகளால் ஈடுசெய்யப்படும் என்ற உண்மை உணர்த்தப்படல்

(இக்குறியீட்டை வேறு வகையிலும் பொருத்தமாக வியாக்கியானம் செய்து எழுதலாம்.)


(5 × 2 = 10 புள்ளிகள்)

**5 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




5ஆம் வினா தெரிவு வினாக்களில் ஒன்றாகும். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

08-10 வரையான புள்ளிப் பரம்பலில் 7% ஆனோரும்
06-07 வரையான புள்ளிப் பரம்பலில் 15% ஆனோரும்
03-05 வரையான புள்ளிப் பரம்பலில் 27% ஆனோரும்
00-02 வரையான புள்ளிப் பரம்பலில் 51% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




தெரிவு வினாக்களில் ஒன்றான இவ்வினா அ, ஆ என்ற உபபிரிவுகளுக்கு முறையே 41%, 39% ஆன பரீட்சார்த்திகளே சரியான விடையளித்திருந்தனர். இவ்வினா ஓரளவு இலகுதன்மை வாய்ந்ததாகும்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- பாடலில் வேப்பமரத்தைப் பற்றிக் குறிப்பிட்ட விடயங்களை முழுமையாக எழுதாது ஒரு சிலவற்றையே எழுதியுள்ளமை.
- பாடலிலுள்ள விடயங்களைத் தமது சொந்த மொழிநடையில் எழுதாமை.
- கவிதையில் இடம்பெற்ற எல்லா உயிரினங்களையும் குறிப்பிட்டு எழுதவில்லை.
- வேப்பமரத்தின் வீழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்ட போதும் வருங்காலம் பற்றிய நம்பிக்கை தெளிவாக எழுதப்படவில்லை.

**அடைவுமட்டத்தினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- நிழலின் நினைவு கவிதையைக் கற்பிக்கும்போது இரசனையோடு கற்பித்தல்.
  - வேப்பமரத்தை பற்றிக் கூறப்படும் கருத்துக்களை வாசிக்கச் செய்தல்.
  - அக்கருத்துக்கள் ஒவ்வொன்றையும் வாக்கியமாக எழுதவும் கூறவும் வழிப்படுத்தல்.
  - விலங்குகளின் செயற்பாடுகளை வினவி நடைமுறைகளோடு தொடர்புபடுத்தி மனதில் பதிய வைத்தல்.
- "குறியீட்டுக்கவிதை" என்பதைத் தெளிவுபடுத்தல்.
  - வேப்பமரம், புயல்வரவு, மரம் சரிவு போன்ற சொற்குறியீடுகளை வேறு சம்பவங்களுடன் தொடர்புபடுத்திக் காட்டல்.

**வினா இல. 6**

**6.** (அ) **புறப்படுவோமே மச்சான்...** என்ற நாட்டார் பாடலில் மீனவர்களது உற்சாகம், அவர்களது தொழில் பற்றிய பெருமிதம் என்பன புலப்படுமாற்றையும்

(ஆ) **கடற்புறம்** என்ற கவிதையில் மீனவர் சமூகத்தின் அவல வாழ்வு சித்திரிக்கப்படுமாற்றையும் விளக்குக.

(10 புள்ளிகள்)


**6ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

அ)
- மீனவர்களது உற்சாகம்
  - புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே
    கட்டுவலை எடுத்துக்கிட்டு புறப்படுவோமே எனும் உற்சாகமான அழைப்பு.
  - கடலைக் கடப்பதற்குத் தோணி, கடலில் மீன் வகை, இறைவன் தந்த கைகள் இருப்பதை எண்ணிய நம்பிக்கை
- தொழில்பற்றிய பெருமிதம்
  - மாதச்சம்பளம் பெறும் உத்தியோகத்தைவிட தமது தொழிலை உயர்ந்ததாகக் கருதுதல்.
  - கடல் கடந்து மீன்பிடித்துக் கவலையற்று வாழ்வோம் எனப் பெருமிதப்படுதல்.

ஆ)
- மீனவர் சமூகத்தின் அவல வாழ்வு
  - தாழைமரவேலி, சிறுகுடிசை, குடிசைக்குள்ளே தூங்கும் சிறுகுழந்தை பற்றிய விபரிப்பு
  - அச்சத்துடன் கூடிய வாழ்வு
    (கல்லுவைத்த கோவிலெல்லாம்...)
  - கடல் தொழிலிலுள்ள ஆபத்துக்கள் பற்றிய விபரிப்பு
    (ஆழ்கடலில் ஆடுகின்ற தோணி, பெருங்காற்று, கும்மிருட்டு, கடற்பெருக்கு,)
  - பாடுபட்டு உழைத்தும் முதலாளி தரும் சொற்ப கூலியையே நம்பியிருக்கும் அவலம்.
  - வாழ்வில் விடிவு இல்லை என்ற ஏக்கம்.


($5 \times 2 = 10$ புள்ளிகள்)

**6ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




6ஆம் வினா தெரிவு வினாக்களில் ஒன்றாகும். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

இதில்,
08-10 வரையான புள்ளிப் பரம்பலில் 9% ஆனோரும்
06-07 வரையான புள்ளிப் பரம்பலில் 18% ஆனோரும்
03-05 வரையான புள்ளிப் பரம்பலில் 34% ஆனோரும்
00-02 வரையான புள்ளிப் பரம்பலில் 39% ஆனோரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




தெரிவு வினாக்களில் ஒன்றான இவ்வினாவும் இரு உபபிரிவுகளைக் கொண்டது. (அ), (ஆ), பிரிவுகளுக்கு முறையே 43%, 46% ஆன பரீட்சார்த்திகளே சரியான விடையளித்திருந்தனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- கவிதையில் இடம்பெறும் உணர்வுகளைப் புரிந்து விடையளிக்கத் தவறியுள்ளமை.
- மீனவர்களின் அவல வாழ்வில் விடிவு இல்லை என்ற ஏக்கத்தினைக் குறிப்பிடவில்லை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- பாடல்களை நயந்து அபிநயத்துடன் பாட வைத்தல்.
- பாடலில் வரும் உணர்வுகளைச் சிறு சிறு தலைப்புகளின் கீழ் பகுத்து எழுதப் பயிற்றுவித்தல்.
- சொந்த மொழிநடையில் கூறுவதற்கும் எழுதுவதற்கும் பயிற்சியளித்தல்.
- கவிஞரின் மனநிலையை மாணவர்களின் மனப்படிமமாக்க வழியேற்படுத்தல்.
- மாணவர்களை தமது சூழலில் அவதானித்த வாழ்வியற் சவால்களை கவிதையாக்க களங்கொடுத்தல், பயிற்றுவித்தல், பின்னூட்டல் செய்தல்.

**வினா 7.**

**7. பாரதியார் கவிநயம்** என்னும் கட்டுரையில்

(அ) இயற்கையழகு

(ஆ) குழந்தைகளால் பெற்றோர் அடையும் உவகை

ஆகியவற்றை எடுத்துரைக்கும் ஆற்றல் பாரதியாரிடம் காணப்படுகின்றது என்பதைக் கட்டுரையாசிரியர் நிறுவுமாற்றைத் தெளிவுறுத்துக.

(10 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

அ) ● இயற்கையழகை எடுத்துரைக்கும் ஆற்றல்

- இயற்கையில் பாரதிக்குள்ள ஈடுபாட்டை எடுத்துரைத்தல் (காணிநிலம் வேண்டும்....)
- இயற்கை இன்பத்தை எடுத்துரைக்கும் பாரதியின் “காணிநிலம் வேண்டும்” என்னும் பாடல் “மனநிறைவு” என்னும் பொருள்பற்றிய எந்த மொழிப் பாடல்களையும்விடச் சிறந்தது எனல்.
- விலங்குகளும் தாவரங்களும் மலர்களும் நிறைந்த காடுகளையும் சோலைகளையும் வருணிப்பதில் பாரதியாருக்கு நிகராக யாரும் இல்லை எனல். (மிக்க நலமுடைய மரங்கள்)
- காதலைப் பாடும்வேளையிலும் அக்காட்சிக்குப் பின்னணியாக அமையும் இயற்கைக் காட்சியை கண்முன்னே காண்பது போலக் காட்டும் ஆற்றல் அவரிடம் இருப்பதை எடுத்துரைத்தல். (அல்லிக்குளத்தருகே.....)


ஆ) ● குழந்தைகளால் பெற்றோர் அடையும் உவகையை எடுத்துரைக்கும் ஆற்றல்.

- குழந்தைகள் பெற்றோருக்கு விளைவிக்கும் மகிழ்ச்சியை இவரைவிட எந்தக் கவிஞனும் நன்றாக விளக்கியதில்லை எனல். (கன்னத்தில் முத்தமிட்டால்.....)
- குழந்தைகளின் செயல்கள் பெற்றோருக்கு மகிழ்ச்சியை விளைவித்து அவர்களது மூர்க்கத்தையும் தவிர்ப்பதை எடுத்துரைத்தல். (சொல்லும் மழலையிலே......)

(5 × 2 = 10 புள்ளிகள்)

**7ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**


**7 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




7ஆம் வினா தெரிவு வினாக்களில் ஒன்றாகும். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

இதில்,
08-10 வரையான புள்ளிப் பரம்பலில் 11% ஆனோரும்
06-07 வரையான புள்ளிப் பரம்பலில் 19% ஆனோரும்
03-05 வரையான புள்ளிப் பரம்பலில் 31% ஆனோரும்
00-02 வரையான புள்ளிப் பரம்பலில் 39% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**7 ஆம் வினாவின் பிரிவுகளுக்கும் உபபிரிவுகளுக்குமான இலகுத்தன்மை**




இவ்வினா தெரிவு வினாக்களில் ஒன்றாகும். வினாவின் (அ) பிரிவுக்கு 41% ஆன பரீட்சார்த்திகளும் (ஆ) பிரிவுக்கு 44% ஆன பரீட்சார்த்திகளும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை**

- பாரதியார் கவிநயம் கட்டுரையை ஆதாரமாகக் கொள்ளாது பரீட்சார்த்திகள் தமது கருத்துக்களை விடைகளாக அளித்துள்ளமை.
- பாரதியாரின் கவியாற்றலை மாணவர்கள் புரிந்துகொள்ள இடர்ப்பட்டுள்ளமை.
- வினாக்களுக்கேற்ப விடைகளை எழுதுவதில் இடர்ப்பட்டுள்ளனர்.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- வினாவுக்கேற்ப கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு எழுதுவதற்குப் பயிற்சியளித்தல்.
- கட்டுரையில் ஆசிரியர் கூற்றாக வரும் விடயங்களைக் கவனத்திற்கொள்ள வழிப்படுத்தல். உ-ம் : பாரதியாரின் கவியாற்றலை விதந்து கூறும் பகுதிகளைக் காட்டி எழுதப் பயிற்சி வழங்குதல்.
- பாடப்பரப்பினை நுணுக்கமாகக் கற்பித்தல்.
    - கட்டுரையாசிரியர் பற்றிய திறன்கள்
    - கட்டுரையாசிரியரால் குறிப்பிடப்படும் பாரதியாரின் கவித்திறன்கள்
    - எடுத்துக்காட்டுக்கள்

### 2.3.3 **வினாப்பத்திரம் III இற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளின் தொகுப்பும் பொதுவான ஆலோசனைகளும்**

**அவதானிக்கப்பட்ட பொதுவான குறைபாடுகள்**

- ★ மாணவர்கள் இலக்கியப் பாடப்பரப்பில் பூரண அறிவைக் கொண்டிருக்கவில்லை
- ★ பாடற்பகுதிகள், உரைநடைப் பகுதிகள் என்பவற்றை நயந்து இரசனையுடன் அவற்றை வெளிப்படுத்தும் திறன் குறைவாகக் காணப்படல்.
- ★ அரும்பதங்களுக்கான பொருள் விளக்கங்களை சரியாகப் புரிந்துகொள்ளாமை

**ஆலோசனைகள்**

- ★ விதிக்கப்பட்ட பாடநூல்களின் பாடப்பரப்பினை நுணுக்கமாகக் கற்பித்தல்.
- ★ பாடப்பரப்புகள் தொடர்பாக வாய்மொழி வினாக்களுக்கு விடையளிக்கச் செய்தல்.
- ★ வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை எழுதும் பயிற்சிகள் வழங்குதல்.
- ★ படைப்புக்கள், நூல், நூலாசிரியர் ஆகிய தயாரிப்புக்களை உள்ளடக்கி பட்டியல் தயாரித்தல்.
- ★ நூல், நூலாசிரியர், நூல் எழுதப்பட்ட காலம், பின்னணி போன்ற பொதுவான விளக்கத்தினை ஆசிரியர் வழங்குதல்.
- ★ இலக்கியம் சம்பந்தமான பொது அறிவுப் போட்டிகளை நடாத்துதல்.
- ★ பாடசாலை நிகழ்வுகளில் இலக்கியச் சொற்பொழிவுகளை நிகழ்த்துதல்.
- ★ ‘சொல்லாடுகளம்’ போன்ற நிகழ்வுகளுக்கு ஊக்கமளித்தல்.
- ★ கணிப்பீட்டில் பாவோதல் போன்றவற்றுக்கு முக்கியமளித்தல்.
- ★ சொல், சொற்றொடர், அணிச் சிறப்புக்களை இனங்கண்டு கற்பித்தல்.
- ★ பாடப்பரப்பினை உள்ளடக்கிய அருஞ்சொற்பொருள் அகராதி தயாரித்தல்.

## பகுதி III

## 3 விடையளிக்கும்போது அவதானிக்க வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

### 3.1 விடையளிக்கும்போது அவதானிக்க வேண்டிய விடயங்கள்

**பொதுவானவை**

- ★ மாணவர்கள் வினாப்பத்திரங்களிலுள்ள அறிவுறுத்தல்களை முழுமையாக, சரியாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். எத்தனை வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்?, கட்டாய வினாக்கள் எவை?, நேர ஒதுக்கீடு எவ்வளவு?, புள்ளி ஒதுக்கீடு எவ்வளவு? என்பவற்றை முதலில் சரியாக விளங்கிக் கொண்டு, பின்னர் வினாக்களை சரியாக வாசித்து விளங்கி விடையளித்தல் வேண்டும்.
- ★ முதலாம் வினாப்பத்திரத்துக்கு விடையளிக்கும்போது மிகச் சரியான ஒரு விடையைத் தெரிவுசெய்து அவ்வினாவுக்குரிய கூட்டினுள் தெளிவாகப் புள்ளடியிடல் வேண்டும்.
- ★ இரண்டாம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு வினாவுக்குமுரிய விடைகளை விடைத்தாளின் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் நன்று.
- ★ எழுத்துப் பிழைகளின்றி தெளிவான கையெழுத்தில் எழுத வேண்டும்.
- ★ ஒவ்வொரு விடைத்தாளின் இரு பக்கத்திலும் சுட்டெண்களைத் தெளிவாக எழுதுதல் அவசியம்.
- ★ வினா இலக்கத்தையும் பிரிவு வினாக்களின் இலக்கங்களையும் விடை எழுத ஆரம்பிக்குமுன் தெளிவாகவும் சரியாகவும் குறிப்பிட வேண்டும்.
- ★ கேட்கப்பட்ட வினாக்களின் தன்மைக்கேற்ப சுருக்கமாகவோ விளக்கமாகவோ விடையளித்தல் வேண்டும்.
- ★ வினாக்களுக்கு விடையளிக்கும்போது, தர்க்கரீதியாகவும் ஆய்வுரீதியாகவும் விடையளித்தல் வேண்டும்.

**பாடரீதியானவை**

- ★ மாணவர்கள் நவீன அறிவுக் கருவூலங்களைத் தேடிக் கற்று அவற்றைப் பொருத்தமான இடங்களில், குறிப்பாக வினாப்பத்திரம் II இல் கட்டுரை, கடிதம் போன்ற எழுத்தாக்கங்களுக்கு பிரயோகிக்க வேண்டும்.

- ★ பாடங்களைக் கற்பதன் மூலம் பெறும் அறிவை **வினாக்களுக்கு ஏற்ப** உருமாற்றி விடையளிக்கும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

- ★ வினாக்களில் வினவப்படுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு விடையளித்தல் அவசியமாகும். (தெளிவுறுத்தல், சித்திரித்தல், விவரணம், விளக்கம், ஆராய்தல், எடுத்துக்காட்டுதல், வலியுறுத்தல் போன்றன.)

- ★ **கற்றல் இடமாற்றம்** இங்கு வேண்டப்படுகிறது. அதாவது தாம் கற்ற விடயங்களைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்திக் கொள்ளும் திறன் அவசியமாகும்.

- ★ சொல்லாக்கம், வாக்கிய அமைப்பு, புதிய சொற்களின் பிரயோகம், வழுக்களைத் தவிர்த்தல் (திணை, பால், எண், இடம், காலம் ஆகிய வழுக்கள்) சொற்பிழைகளற்றிருத்தல்.

- ★ சொந்த மொழிநடையில் புதிய சிந்தனைகளைப் புகுத்தி விடையளிக்கும் திறனை விருத்தி செய்ய வேண்டும்.

- ★ செய்யுட்களுக்கு பொருள் விரிப்பதிலும் அவற்றை நயப்பதிலும் அதிகமதிகமான பயிற்சிகளைச் செய்வது அவசியமாகும்.

- ★ ஆக்க வினாக்களுக்கான விடைகள் ஆழமான பொருள் கொண்டனவாகவும் சீரான அமைப்புடையனவாகவும் இருப்பது சிறந்தது. அவை அதிக புள்ளிகளை ஈட்டிக்கொள்ளும் வழிமுறையும் ஆகும்.

## 3..2 கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்

- ★ பாட விடயத்தைக் கற்பித்து முடித்தவுடனேயே வினா விடைப் பயிற்சிகள் வழங்கி மதிப்பீடு செய்வது அதிக பலனைத் தரும்.

- ★ மாணவர்கள் தமிழ்மொழி, இலக்கியம் சார்ந்த தகவல்களைச் சேகரிக்கவும், சுயமாகக் கற்றலில் ஈடுபடவும் தூண்டுதல்.

- ★ மொழி கற்றல் கற்பித்தலின்போது அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்பவற்றில் தேர்ச்சி பெறும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

- ★ இலக்கியத்தைக் கற்பிக்கும்போது நயந்து கற்பித்தலும் மாணவர்களை நயக்கச் செய்தலும் வேண்டும். பாடப்பரப்பில் வரும் விடயங்கள் தொடர்பாக மேலதிக விளக்கங்கள் கொடுத்தல். பகுத்தும் தொகுத்தும் எழுதவழிப்படுதல் பயிற்சிகளை ஆர்வத்துடன் செய்யத்தூண்டுதல்.

- ★ மொழிச் செம்மை பற்றிய கரிசனை அதிகம் வேண்டப்படுகிறது. எழுத்துப் பிழைகள், வாக்கியப் பிழைகளைத் தவிர்ப்பதற்கான பயிற்சிகளும் ஆழமான, அழகிய சொந்த மொழிநடையில் விடைகளை முன்வைக்கும் திறனையும் விருத்தி செய்வதற்கு அவ்வப் பாடமுடிவில் மேலதிக பயிற்சிகளை ஆர்வத்துடன் செய்யத் தூண்டுதல்.

- ★ புதிய நூல்களைத் தேடி வாசிக்கவும், அவற்றிலிருந்து பெறும் தகவல்களைக் கொண்டு கட்டுரை, கடிதம், சிறுகதை, துண்டுப்பிரசுரம் போன்ற ஆக்கங்களை உயர்ந்த மட்டத்தில் படைப்பதற்கு வழிகாட்டுவதுடன் அவற்றில் சிறந்தவற்றைக் காட்சிப்படுத்தி ஊக்குவிப்பு வழங்குதலும் பாராட்டுதலும்.